Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :193 வைகாசி 27ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 09 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# ஒகஸ்ட் முதல் வாரம் தேர்தல்?

யாழ்ப்பாணம், ஜூன் 9

நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஒகஸ்ட் 8 ஆம் திகதி அல்லது 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி நாளை புதன்கிழமை வெளியாகவுள்ளது. இதன்போதே எந்தத் திகதி என்பதை வெளியிடுவதெனவும், அதுவரை தேர்தல் திகதி தொடர்பில் இரகசியம் காப்பதெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ளது. இதேவேளை வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்களை உள்ளடக்கிய வர்த்தமானி இன்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்படவுள்ளது. 15 ➤

## கொரானா 1,857

நேற்று தொற்று: 22 பேர்

குணமடைந்தோர்:
நேற்று: 49 பேர்
மொத்தம்: 990 பேர்

மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர்: 856 பேர்

உயிரிழப்பு: 11

கண்காணிப்பில்: 41 பேர்

(எ-22)

# யாழில் தங்கியிருந்த இந்தியருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் இணுவிலில் 3 மாதங்களாக தங்கியிருந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்தியாவின் தமிழகம் திண்டுக்கல்லைச் சேர்ந்த கணேஸ் பாபு என்பவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. 15 ➤

## இணுவில் ஏழாலையில் சிலர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இணுவிலில் தங்கியிருந்த இந்தியப் புடைவை வியாபாரிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவர் சென்று வந்த 15 ➤

## வடக்கிலும் பரீட்சார்த்த தேர்தல்

கொழும்பு, ஜூன் 9

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களிலும் பரீட்சார்த்த தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித் 15 ➤

## மரத்தால் வீழ்ந்து ஒருவர் சாவு

வவுனியா, ஜூன் 9

மரத்திலிருந்து தவறி வீழ்ந்த ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் வவுனியா மடுகந்த பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் அன்ரன் அருள்நாதன் (வயது-51) என்ப 15 ➤

## இளைஞன் மயங்கிச் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 9

வேலை செய்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்று 15 ➤

## மர்மமான முறையில் இளைஞர் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 9

வீட்டிலிருந்தபோது திடீரென சுகவீனமுற்று இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். வவுனியா, உக்கிளாங்குளத்தைச் சேர்ந்த ச. அன்ரனி (வயது-35) என்பவரே 12 ➤

## பூநகரியில் கோர விபத்து: குடும்பஸ்தர் உயிரிழப்பு



கிளிநொச்சி, ஜூன் 9

பூநகரி மன்னார் வீதியில், 4ஆம் கட்டைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். காயம 15 ➤

## மறைக்கிறதா இந்தியத் தூதரகம்?

யாழ்ப்பாணம், ஜூன் 9

இணுவிலிலிருந்து இந்தியாவுக்குச்சென்ற புடைவை வியாபாரிக்கு கடந்த மூன்றாம் திகதி மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொற்றுச் சோதனையில் அவருக்கு தொற்று இருப்பது உறுதி 15 ➤

## முச்சந்தி முரளி



"இதென்னடா எல்லாம் முடியுது எண்டு நினைக்க இன்னொரு பக்கத்தால பீதியைக் கிளப்பிறாங்கள்"

## 'பாஸ்' தேவையில்லை

சாவகச்சேரி, ஜூன் 9

மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்துச் செய்வதற்கு சுகாதார மருத்து அதிகாரி பணியகங்களில் அனுமதி பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

நேற்றுத் 15 ➤

## காதலர்களை சந்திக்கச் சென்ற இரு பெண்களில் ஒருவர் கடத்தல்

### கொடிகாமத்தில் சம்பவம் தேடுகின்றது பொலிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் இருந்து நேற்று மதியம் தென்மராட்சி கொடிகாமத்தில் உள்ள காதலர்கள் என்று கூறப்படும் இளைஞர்கள் இருவரை சந்திக்க வந்த பெண்கள் இருவரை குழு ஒன்று 15 ➤

## இருதரப்புச் சண்டையில் இளம் பெண்ணுக்கு தீ!

வவுனியா, ஜூன் 9

இரு தரப்புச் சண்டையில் தீ மூட்டப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் ஆபத்தான நிலைமையில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. 12 ➤

## ஐ.நாவை ஒதுக்கினால் பேராபத்து நாட்டுக்கே!

### கோத்தா அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 9

ஐ.நா. தீர்மானங்களின் பிரகாரம் மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு அரசு பதவிகளை வழங்கி அவர்களைப் பாதுகாக்கக்கூடாது

இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். 15 ➤

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி

# தேர்தல் ஆணைக்குழுவை துளியளவும் நம்பவில்லை!

## 'மொட்டு' அணி கூறுகின்றது

**கொழும்பு, ஜூன் 9**

**நான் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் என்ற வகையில், தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பாக துளியளவும் நம்பிக்கையில்லை என்று தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வாறு சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் சிறிலங்கா பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறியுள்ளார்.

மறைமுகமாகக்கூட இல்லாமல், மிகவும் தெளிவாக ரட்ணஜீவன் ஹூல், தாமரை மொட்டுக்கு வாக்களிக்க வேண்டாம்என்று தெரிவித்துள்ளார். சிறிலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் என்ற வகையில், தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பாக துளியளவும் நம்பிக்கையில்லை என்று நான் இவ்வேளையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைவிட, 'இதற்கு முன்னர் இருந்த நிலைமை சிறந்தது என்பதுதான் எமது நிலைப்பாடு' என்று ரட்ணஜீவன் ஹூல் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நிலையில், நாம் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பாக எவ்வாறு முழுமையான நம்பிக்கையைக் கொள்வது? அவர்கள் ஒரு சார்பாகத்தான் செயற்படுகிறார்கள் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

இந்தநிலையில், பொதுத்தேர்தல் நடுநிலையாக நடைபெறுமா எனும் பிரதான சந்தேகம் எழுந்துள்ளது- என்றார். (ஒ.5,22)

# வேடிக்கை பார்க்காது சர்வதேசம்

## கேள்விகளுக்கு அரசு பதிலளித்தே தீர வேண்டும் என்கின்றார் மங்கள



கொழும்பு, ஜூன் 9

இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்துதான் தற்போது அரசு விலகியுள்ளது. அந்தத் தீர்மானங்களிலிருந்து அரசு முழுமையாக விலகினாலும் அவை செல்லுபடியாகும். தீர்மானங்களை நிறைவேற்றிய சர்வதேச நாடுகள் கைகட்டி வேடிக்கை பார்க்கமாட்டாது. எனவே, ஐ.நா. தீர்மானங்களை காலதாமதமின்றி அரசு நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும்.

இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமை நாடுகளில் இலங்கை தொடர்ந்து அங்கம் வகிக்கின்றது. எனவே, சர்வதேசத்துடன் முட்டிமோதும் வகையில் அரசு செயற்பட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் கேள்விகளுக்கு அரசு பதிலளித்தே தீரவேண்டும். அந்தக் கடமையிலிருந்து அரசு விலக முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. தீர்மானங்களிலிருந்து விலகி விட்டோம். எனவே, சர்வதேசம் எங்களைக் கேள்வி கேட்க முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஒ.5,22)

# ஏ.ரி.எம் இயந்திரத்தை உடைக்க முயற்சி!

வவுனியா, ஜூன் 9

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குளத்தில் உள்ள இலங்கை வங்கியின் தானியக்கப் பணம் வழங்கும் இயந்திரம் உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு நாள்கள் விடுமுறையின் பின்னர் நேற்று வங்கி திறக்கப்ப ட்டபோது தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் உடைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தானியங்கி பணம் வழங்கும் இயந்திர அறையினுள் காணப்பட்ட இரும்பு குப்பைக் கூடையால் பணம் வழங்கும் இயந்திரத்தை உடைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-18)

# ஹூலுக்கு மஹிந்த நற்சான்றிதழ்

கொழும்பு, ஜூன் 9

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் பேராசிரியர் ரட்னஜீவன் ஹூல் கருத்து வெளியிடவில்லை என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலின் அறிவிப்பு தொடர்பில் எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

பேராசிரியர் ஹூல் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் அறிவிப்பு எதனையும் விடுக்கவில்லை. தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் என்ற வகையில் அரசியல் கட்சிகளுக்கோ அல்லது அரசியல்வாதிகளுக்கோ பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும், அவர்களுக்கு சார்பான விதத்திலும் கருத்துகளை அவர் வெளியிட்டிருக்கமாட்டார். இனி வெளியிடவும் மாட்டார் என நம்புகின்றேன்.

அவரின் அறிவிப்பு குறித்து யாரிடமாவது உரிய மொழிபெயர்ப்பு இருந்தால் அது பற்றி கவனம் செலுத்தப்படும் என கூறியிருந்தேன். எனினும், ரட்னஜீவன் ஹூலுடன் நாம் இணைந்து பணியாற்றுகின்றோம். அவர்மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆணைக்குழுவின் சுயாதீனத்தை சவாலுக்குட்படுத்தியிருக்கமாட்டார் என்றார். (எ-44)

# போராட்டத்துக்கு தடை!

கொழும்பு, ஜூன் 9

அமெரிக்காவில் கொல்லப்பட்ட ஜோர்ஜ் பிளொய்டின் இறப்புக்கு நீதி கோரி கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக இன்று மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போராட்டத்துக்கு நீதிமன்று தடை விதித்துள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சி இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்தப் போராட்டத்தின் மூலம் தனிமைப்படுத்தல் சட்டங்கள் மீறப்படும் எனக் கோட்டை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி போராட்டத்துக்குத் தடை விதித்து உத்தரவிட்டார். (எ)

# அரச நிறுவனத் தலைவர்கள் கட்சி சாரக்கூடாது

## ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

பொதுத்தேர்தலில் எந்த அரசியல் கட்சி சார்பாகவும் செயற்படக்கூடாது என அரச நிறுவன தலைவர்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரச கூட்டுத்தாபனம் மற்றும் சபைகள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபையிலுள்ள எவரும் எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது எந்தவொரு அரசியல் கட்சிக்காக செயற்படவோ, அரசியல் நடவடிக்கையில் ஈடுபடவோ கூடாது என ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

எந்தவொரு அரச நிறுவனத்தினதும் தலைவருக்கு, பணிப்பாளர் சபை உறுப்பினருக்கு அல்லது வேறு அதிகாரி ஒருவருக்கு ஏதேனும் ஒரு கட்சிக்காக அரசியலில் ஈடுபடவேண்டிய தேவையிருந்தால் சட்ட ரீதியாக தனது பதவியிலிருந்து விலகி அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட முடியும்.

ஆனால் அரச நிறுவன தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் அரசாங்கத்திற்காக அரசியல் செய்ய வேண்டும் என ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் செய்ய வேண்டியது தமது பொறுப்பில் உள்ள நிறுவனங்களை வினைத்திறனாகவும், ஊழல் மோசடிகள் இன்றியும், பயனுறுதியும் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் கொண்ட இலாபமீட்டும் நிறுவனங்களாக முன்னேற்றுவதாகும்.

அரச நிறுவனங்கள் பொதுமக்கள் பணத்திலேயே இயங்குகின்றன. எனவே அவை எந்த வகையிலும் பொதுமக்களுக்கு சுமையாக இருக்கக் கூடாது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகள் ஆகிய அரச நிறுவனங்களிடம் உள்ள வாகனங்கள், உபகரணங்கள் போன்ற பௌதீக வளங்கள் அல்லது நிதி வளங்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சிக்காகவோ அல்லது அரசியல் பணிகளுக்காகவோ பயன்படுத்தக்கூடாது.

இந்த உத்தரவுகளை மீறும் அரச நிறுவனங்களின் தலைவர்கள், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார் என்றுள்ளது. (எ)

# இந்தியாவைப் போல் உறுதியான கொள்கையை வகுக்க வேண்டும்

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 9**

**இந்தியாவை முன்னுதாரணமாகக் கொண்டு, நீண்ட காலத்துக்குரிய ஓர் உறுதியான கொள்கையொன்றை இலங்கை வகுக்க வேண்டும் என அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தங்காலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எந்தவொரு நாட்டிலும் நீண்ட காலத்துக்கான ஒரு கொள்கைத் திட்டமொன்று காணப்படும். இந்தியாவில் 20 வருடத்திற்கான ஸ்திரமான கொள்கையொன்று வகுக்கப்பட்டுள்ளது. அங்கு எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அந்த பொதுக் கொள்கையொன்றின் கீழ் தான் அந்தநாடு பயணிக்கும். தற்போது 30 வருடங்கள் கால எல்லையைக் கொண்ட ஒரு கொள்கையை அவர்கள் வகுக்கிறார்கள். ஆனால் எமது நாட்டில் இந்த நிலைமை இல்லை. தற்போது புதிதாக ஓர் அரசு ஆட்சியமைத்துள்ளது. இதனால், கடந்த காலச் செயற்பாடுகள் மாற்றப்பட்டுள்ளன. இதற்குப் பின்னர் ஒரு புதிய அரசு வந்தாலும் இதேநிலைமைதான் காணப்படும். எமக்கும் இந்தியாவைப் போன்று நீண்ட கால கொள்கையொன்றை வகுக்க வேண்டும். இதன் ஊடாகத் தான் கீழ்மட்ட வரை அபிவிருத்திகளை விரிவாக்க முடியும் - என்றார். (ப)

# பாலியல் நோக்கில் கையைப் பிடித்த நபருக்கு மறியல்

திருகோணமலை. ஜூன் 9

16 வயதுடைய சிறுமியின் கையை பாலியல் ரீதியிலான நோக்கில் பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞரொருவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் சமிலா குமாரி ரத்நாயக்க உத்தரவிட்டார்.

புடவைக்கட்டு, குச்சவெளி பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் குச்சவெளி பகுதியிலுள்ள 16 வயதுடைய சிறுமி அவருடைய வீட்டில் நின்றிருந்தபோது வேறு எவரும் இல்லாத போது பாலியல் ரீதியில் கையைப்பிடித்துள்ளார் என்று சிறுமியின் பெற்றோர் குச்சவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அந்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரை கைதுசெய்த பொலிஸார் அவரை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் வாசஸ்தலத்தில் முற்படுத்தினர். அதன் போதே எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (க)

# தபாலகத்தில் திருட்டு முயற்சி

கிளிநொச்சி, ஜூன் 9

கிளிநொச்சி பரந்தன் தபால் அலுவலகத்தில் திருட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பூட்டப்பட்டிருந்த தபாலகத்தை நேற்று திங்கட்கிழமை காலை கடமைகளுக்காக திறந்த போதே, பாதுகாப்பு பெட்டகம் கோடாரிகொண்டு உடைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

தபால் அலுவலகத்தின் பாதுகாப்பு பெட்டகம் கோடரி மூலம் உடைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பெறுமதியான எந்தப் பொருள்களும் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை என்று பரந்தன் தபால் அதிபர் தெரிவித்துள்ளார். அத்தோடு உடைப்பதற்காகப் பயன்படுத்திய கோடரியையும் திருடர்கள் விட்டுச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (க-214,113)

# கொரோனா நீங்கவில்லை அவதானம் மிகஅவசியம்

## சுகாதார சேவை பிரதி இயக்குநர் தகவல்

கொழும்பு, ஜூன் 9

இலங்கையில் கொரோனா வைரஸ் முடிவுக்கு வந்துவிட்டதாக எவரும் எண்ணக்கூடாது என சுகாதார சேவை பிரதி இயக்குநர் சிறப்பு மருந்துவ நிபுணர் பபா பலிஹவன தெரிவித்துள்ளார்.

மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேருந்தில் அல்லது ரயிலில் பயணிக்கும் போது சுகாதார ஆலோசனைகளை மறந்து செயற்பட்டால் மீண்டும் கொரோனா பரவும் ஆபத்து ஏற்படக்கூடும். இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகள் பலருக்கு மறந்து போயுள்ளன.

கொரோனாத் தொற்று தற்போது இல்லை என்று கருதி பலர் செயற்படுகின்றனர். அப்படி இல்லை. அனைத்து சந்தர்ப்பங்களிலும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டும்.

சுப்பர் மார்க்கட்டுக்கு சென்றாலும், கடைகளுக்கு சென்றாலும் சுகாதார முறைகளை பின்பற்ற வேண்டும். தங்களுக்குத் தேவையான முறையில் வீதிகளில் செயற்பட முடியாது. இன்னமும் கொரோனா நாட்டை விட்டு நீங்கவில்லை. நோயாளிகள் தொடர்ந்து அடையாளம் காணப்படுகின்றார்கள் - என்றார். (ம)

# கருணாவின் குற்றச்சாட்டு அரசியல் நாகரிகமற்றது!

## முன்னாள் எம்.பி. ஜெயானந்தமூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 9

விநாயகமூர்த்தி முரளிதரனின் (கருணா) கட்சியான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் பெயரைத் திருட்டுத்தனமாகப் பிரப்புரைக்குப் பயன்படுத்துகின்றேன் என்று விநாயகமூர்த்தி முரளிதரன் குற்றஞ் சுமத்தியுள்ளமையானது அரசியல் நாகரிகம் இல்லாத செயல் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியிலிருந்து விலகி பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகக் களமிறங்கியமையை அடுத்து அவருக்கும் கருணாவுக்கும் இடையில் வார்த்தைமோதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அவரது கட்சியில் இருந்துதிருட்டுத்தனமாக வெளியேறியுள்ளேன். அவரது கட்சியின் பெயரை பயன்படுத்தி பரப்புரை செய்கின்றேன் என்று கருணா குற்றஞ் சுமத்துகின்றார். உண்மையில் நடக்க இருக்கும் நாடாளுமன்ற வேட்பாளர்களின் பங்கீட்டின் காரணமாகவே நான் அந்தக்கட்சியில் இருந்து வெளியேறினேன்.

அதேவேளை அந்த கட்சியின் பெயரை பயன்படுத்தி நான் எந்தப் பரப்புரையும் செய்யவில்லை. அதேவேளை என் மீது வீண் குற்றச்சாட்டு சுமத்திவருவது பொருத்தமில்லாத, அரசியல் நாகரிகமில்லாத செயல் என்றார். (ம)

# வழமைக்குத் திரும்பியது வவுனியா வைத்தியசாலை

வவுனியா, ஜூன் 9

வவுனியா மருத்துவமனையில் சேவைகள் அனைத்தும் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன. சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அதிகளவான நோயாளர்கள் மருத்துவமனைக்கு வந்தமையை அவதானிக்க முடிந்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நோய்த் தொற்று காரணமாக வவுனியா மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் பிரிவுகள், கதிரியக்கப்பிரிவு, பிறப்பு இறப்பு பிரிவு போன்றவற்றின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தற்போது நாடு வழமைக்குத் திரும்பியுள்ளதை யடுத்து மட்டுப்படுத்தப்பட்டிருந்த சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ப-110)

# ரூ.11 இலட்சம் பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கைது

சுமார் 11 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்துடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்படையின் வடமத்திய கட்டளைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலொன்றின் பிரகாரம், மன்னார் பொலிஸ் குற்றப்பிரிவினரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது மன்னார் பிரதான பஸ் நிலையத்தில் வைத்து 109 கிராம் தங்கத்துடன் சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி குறித்த தங்கத்தை எடுத்துச் செல்ல முயன்ற குற்றச்சாட்டில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்கத்தின் பெறுமதி சுமார் 11 இலட்சம் ரூபா எனவும், குறித்த சந்தேகநபர் மன்னார் தாராபுரத்தைச் சேர்ந்த 37 வயதான ஒருவரெனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (க)

# பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஆசனங்களின் எண்ணிக்கை அடிப்படையில் பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டுமாயின் பேருந்துக் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும். என்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆசனங்களின் எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்வதால், தமது வருமானம் 50 வீதமாக குறைந்துள்ளதாகவும் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஐ)

# இந்த மாத இறுதிக்குள் பாடசாலைகள் ஆரம்பம்

## கல்வி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 9

**கொரோனா தொற்றால் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை இந்த மாத இறுதிக்குள் மீள ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

கல்வியமைச்சு வட்டாரங்களின் தகவலின் படி, முதலில் க.பொ.த உயர்தர வகுப்புக்களே ஆரம்பிக்கப்படவுள்ளன. பாடசாலைகள் மீள ஆரம்பிப்பதற்கு முன்னர், உடல் வெப்பநிலையை அளவிடும் கருவிகளைப் பாடசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. 16 ஆயிரம் உடல் வெப்பநிலை அளவிடும் கருவிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தத்தைப்பெறும் நிறுவனம், முதல் கட்டமாக ஒரு வாரத்தில் 8ஆயிரம் கருவிகளையும், அடுத்த வாரத்தில் மிகுதி 8 ஆயிரம் கருவிகளையும் வழங்க வேண்டும்.

இதேவேளை, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக, மாணவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்து கல்வியமைச்சின் அதிகாரிகளும், போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளும் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# கண்காணிப்பு இன்றியே பொதுப் போக்குவரத்து

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

பொது மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் பயணிகளும், அதிகாரிகள் வழங்கிய சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுகின்றார்களா என்பதை அவதானிக்க சிறப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

தனியார் மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன. இந்தநிலையில் பயணிகள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறார்களா என்பதை சோதிக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் சாதாரண நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். ஆனால் முகக்கவசம் அணிவது போன்ற சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்று வதை அவதானிப்பது குறித்து கவனம் செலுத்தப்படாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# பூஸா சிறைக்கூடத்தில் தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 9

பாதாள உலகக் குழுத் தலைவன் கஞ்சிபான இம்ரான் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலி, பூஸா சிறைச்சாலையின் கூடத்திலிருந்து இரு கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உதவியுடன் நடத்தப்பட்ட விசேட தேடுதலின்போதே இவை மீட்கப்பட்டன.

மிகவும் சூட்சுமமாக இந்த இரு தொலைபேசிகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப் படுகிறது. ஒரு தொலைபேசி ஸ்மார்ட் தொலைபேசி எனவும் மற்றையது சாதாரண தொலைபேசி எனவும் தெரிவித்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் இரு சிம் அட்டைகள், சார்ஜர் என்பனவற்றையும் மீட்டுள்ளோம் என்று தெரிவித்தனர். (ஐ)



# ஏற்றுமதித் துறைக்கு தற்போது புதிய வாய்ப்பு

## அதன் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 9

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பெரும் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள ஸ்ரீலங்கா ஏற்றுமதித் துறைக்கு தற்போது புதிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்பிற்கான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கு அதிக அளவிலான வர்த்தகக் கட்டளைகள் பெறப்பட்டுள்ளன என்று இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் பிரபாஷ் சுபசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இதன் மூலம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற வர்த்தக கட்டளைகளை துரித கதியில் மேற்கொள்வதற்கான நடவடிக்கையில் ஏற்றுமதியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதே போல, விவசாய மற்றும் பதனிடப்பட்ட உணவுப் பொருள்களுக்கும் புதிய வர்த்தக கட்டளைகள் கிடைக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, மருத்துவ, மற்றும் சத்திரசிகிச்சை கையுறைகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யும் ஏற்றுமதி நிறுவனங்களுக்குப் போதிய அளவு ஏற்றுமதி உத்தரவுகள் கிடைத்துள்ளன. அப்படியான பொருள்களை உற்பத்தி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு இந்த வருட இறுதிவரை சிறந்த வாய்ப்பு உள்ளது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக தைக்கப்பட்ட ஆடை உற்பத்தி ஏற்றுமதி இலக்கு தற்போது 40 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த நிலை காரணமாக இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (ஐ)

# ஷானிக்கு உயிராபத்து



கொழும்பு, ஜூன் 9

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தொலைபேசி குரல் பதிவு சம்பந்தமாக பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கடும் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. சிங்கள பத்திரிகை ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நடந்த மிக மோசமான பலகுற்றங்கள் மற்றும் பாதாள உலக கொள்ளையர்களை சிக்க வைத்த ஷானி அபேசேகரவை கொலை செய்யும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

கோத்தாபய, மஹிந்த அரசு பதவிக்கு வந்தபின்னர் மிகத் திறமையான புலனாய்வு விசாரணையாளரான ஷானி அபேசேகர குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்கு தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனையடுத்து குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகளை நடத்திய குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளை பின்தொடரும் படலம் ஆரம்பமானது.

இந்த நிலைமையில் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகரான நிஷாந்த சில்வா கந்தப்பா உயிர் பாதுகாப்பு கருதி தனது குடும்பத்தினருடன் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றார். இதனையடுத்து குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பொலிஸ் அலுவலர்கள் தொடக்கம் பணிப்பாளர்கள் வரையிலான பதவிகளில் இருக்கும் 712 அதிகாரிகள் நாட்டிலிருந்து வெளியேற அரசு தடைவிதித்துள்ளது.

ஷானி அபேசேகரவின் நெறிப்படுத்தலின் கீழ் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகள் மற்றும் சந்தேக நபர்கள் பற்றிய விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

1. மெதமுலன டி.ஏ. ராஜபக்ஷ நினைவு அருங்காட்சியாகத்தை நிர்மா ணிக்க 33.9 மில்லியன் அரசபணத்தை தவறாக கையாண்டமை ( சந்தேகநபர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ)
2. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை வழக்கு (சந்தேக நபர்கள் - இரண்டு இராணுவ புலனாய்வு அதிகாரிகள்)
3. வசீம் தாஜுடீன் கொலை வழக்கு (சந்தேக நபர்கள் - இல்லை)

4 நபர்களை கடத்திச்சென்று கப்பம் பெற்ற பின் கொலை செய்த வழக்கு (சந்தேகநபர் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன மற்றும் அவரது புதல்வர்)

5. ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொட கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு ( சந்தேகநபர்கள் இராணுவ புலனாய்வு அதிகாரிகள்)
6. ரோயல் பார்க் கொலை (சந்தேகநபர் ஜுட் அன்டனி தூக்குத் தண்டனை கைதியான இந்த நபர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டார்)
7. மிக் விமான கொள்வனவு தொடர்பான நிதி மோசடி வழக்கு (சந்தேக நபர் உதயங்க வீரதுங்க, 11 சந்தேகநபர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டு 5 லட்சம் ரூபா பெறுமதியான தனிப்பட்ட பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்)
8. மிருசுவில் சிறிய குழந்தைகள் உட்பட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கு (சந்தேக நபர் - இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்க (ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விசேட பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்துள்ளார்)
9. வெலிக்கடை சிறைக் கைதிகள் 27 பேர் கொலை வழக்கு (சந்தேக நபர்கள் பொலிஸ் பரிசோதகர் ரங்கஜீவ, சிறை அதிகாரி எமில் ரஞ்சன் லமாஹேவா)
10. ஏப்ரல் 21 ஈஸ்டர் தாக்குதல் (சந்தேகநபர்கள் இப்ராஹிம் உட்பட உதவிகளை வழங்கிய 9 பேர்)

11 பாடசாலை மாணவர்கள் 11 பேர் கடத்திச் செல்லப்பட்டு கப்பம் கேட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு (சந்தேக நபர்கள் கடற்படை லெப்டினட் கமாண்டர் ஒருவர், முன்னாள் கடற்படை தளபதிகளான வசந்த கரன்னாகொட, ரவிந்திர விஜேகுணவர்தன உட்பட கடற்படையினர் சிலர்)

இப்படியான விசாரணைகளை நடத்திய அதிகாரிகள் வேறு நாடுகளில் ஆடம்பரமான அரச செலவில் பாதுகாக்கப்படுவார்கள். எனினும், இலங்கை போன்ற நாடுகளில் குற்றவாளிகள் நாட்டின் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதால், குற்றங்களை விசாரிக்கும் அதிகாரிகள் நாட்டைவிட்டு தப்பிச் சென்று உயிரை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் அல்லது துப்பாக்கிக்கு இரையாக வேண்டிய நிலைமை காணப்படுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள்கூட இது குறித்து வாய் திறக்காமல் இருப்பதே பாரதூரமான விடயம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (து)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கறுப்பின மக்களிடம் கற்க வேண்டிய பாடம்

உலக வல்லாதிக்கத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் தீவிரம் காட்டி வரும் நாடு அமெரிக்கா. உலக நாடுகள் அனைத்தும் தமது நலன்கள் என்ற வட்டத்துக்குள்ளேயே சுற்றிவர வேண்டும் என அந்த நாடு எதிர்பார்ப்பது மட்டுமின்றி அந்த எல்லையை மீறும் நாடுகள் மீது இராணுவ, பொருளாதார, ராஜதந்திரம் எனப் பல்வேறு முனைகளிலும் அழுத்தம் கொடுக்கத் தயங்குவதில்லை. அத்தகைய ஒரு வல்லரசின் உச்ச அதிகாரம் கொண்ட ஜனாதிபதிதான் டொனால்ட் ட்ரம்ப்.

அத்தகைய பெரும் சக்தி வாய்ந்த ஒரு மனிதரைப் பாதுகாப்புத்தேடி வெள்ளைமாளிகையின் பதுங்கு குழிக்குள் ஓட வைத்தது கறுப்பின மக்கள் கடந்த 14 நாள்களாக நடத்திவரும் போராட்டமாகும். 'ஜோர்ஜ் ப்ளாய்ட்' என்ற கறுப்பின மனிதர் ஒருவர் அமெரிக்கப் பொலிஸார் ஒருவரால் கொல்லப்பட்டமை காரணமாக அதைக் கண்டித்தும் அதற்கு நீதிகோரியும் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்க நகரங்கள் எங்கும் பரவி அமெரிக்காவையே கதிகலங்க வைத்துக்கொண்டிருக்கின்றன. அமெரிக்க மாநிலங்களின் தலைநகரங்களிலுள்ள அரச கட்டடங்கள் பெரும் வர்த்தக நிலையங்கள் என்பன எரியூட்டப்பட்டன. இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டபோதும் கூட போராட்டங்கள் மேலும் மேலும் வலுப்பெற்று வருகின்றன.

அது மட்டுமின்றி லண்டன், சிட்னி, மெல்போண் உட்படப் பல உலக நாடுகளின் தலைநகரங்களில் ஊரடங்குச் சட்டத்தையும் மீறி அமெரிக்கக் கறுப்பின மக்களுக்கு நீதி கோரி போராட்டங்கள் வெடித்துள்ளன.

இப்பிடியாக உலகம் பரந்து விரிந்துள்ள இந்தப் போராட்டமானது ஒரு தனி மனிதனின் படுகொலைக்கு நீதிகோரி ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அடிப்படையில் காலம் காலமாக கறுப்பின மக்கள் மீது நடத்தப்பட்டு வரும் கொடிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இது வெள்ளை இன வெறியர்களின் அராஜகத்துக்கு எதிரான போராட்டமாக இருந்தபோதிலும் இதில் பல்லாயிரக்கணக்கான வெள்ளை இனத்தவர்களும் கலந்து கொண்டமை ஒரு முக்கிய அம்சமாகும். ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் தமிழ் மக்களாகிய நாம் கறுப்பின மக்களிடமிருந்து இவ்விஷயத்தில் நிறையவே கற்றுக் கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியிலுள்ள நியாயபூர்வமான சக்திகளையும் உலக நாடுகளில் உள்ள ஒடுக்கப்படும் மக்களையும் எம்முடன் ஒன்றிணைக்கவும் நாம் அவர்களுடன் ஒன்றிணையவும் தவறி விட்டோம்; தொடர்ந்தும் தவறி வருகிறோம்.

கறுப்பின மக்களின் போராட்டத்திற்குக் கூட நாம் எமது ஆதரவை முழுமையாக வழங்கவில்லை என்பதை மறுக்க முடியாது.

எதிர்காலத்திலாவது நாம் கறுப்பின மக்களிடமிருந்து கற்றுக்கொண்டு எமது உரிமைப் போராட்டத்தை ஐக்கியப்படுத்தக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தி முன்னெடுப்போம்.

# மூன்று மடிப்புக்கொண்ட முகக் கவசத்தை அணிக!

## உலக சுகாதார நிறுவனம் பரிந்துரை

கொழும்பு, ஜூன் 9

**உலக சுகாதார நிறுவனம் ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, மூன்று மடிப்புக்கொண்ட முகக் கவசத்தை அனைவரும் அணியவேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது.**

கொரோனா பரவலைத் தடுக்க உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள புதிய வழிகாட்டுதல்களில் பொதுமக்கள் மூன்று மடிப்புக்கொண்ட முகக் கவசம் அல்லது, மருத்துவப்பயன்பாடுஅல்லாதமுகக் கவசம் அணிந்திருக்க வேண்டும்எனப்பரிந்துரைத்துள்ளது. சமூக விலகலைக் கடைப்பிடிக்க முடியாத இடங்களில் 60 வயதுக்கு மேற்பட்டோரும், உடல்நலப் பாதிப்பு உள்ளோரும் மருத்துவப் பயன்பாட்டு முகக் கவசம் அணியலாம் என்றும், மற்ற அனைவரும் மூன்று மடிப்புக்கொண்ட முகக்கவசத்தை அணிய வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. உண்மையிலேயே முகக் கவசம் தேவைப்படுபவர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக மருத்துவப் பணியாளர்கள், கொரோனா நோயாளிகள், இருமல், தும்மல் இருப்பவர்கள்மட்டும்முகக் கவசம் அணியலாம் என ஏற்கனவே பரிந்துரைத்திருந்தது. (ப)

யாழ்.போதனா மருத்துவமனைக்கு

# இருதய சத்திரசிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு இருதய சத்திரசிகிச்சை நிபுணர் ஆர்.எம்.கன்னங்கரா நியமிக்கப்பட்டுள்ளார் என்று பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்

இதுவரை காலமும் கடமையாற்றிய இருதய சத்திரசிகிச்சை நிபுணர் முகுந்தன் வருடாந்த இடமாற்றத்தில் கொழும்பில் உள்ள சீமாட்டி மருத்துவமனைக்கு சென்றுள்ளார்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இருதய சத்திரசிகிச்சை சேவைகள் தடையின்றி தொடரும். வாரத்தில் செய்யப்படுகின்ற சத்திரசிகிச்சைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் என்றும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (த-20)

# மனு தள்ளுபடி

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார இடைக்கால தடைகோரி இவ்வாறு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஊடாக எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்த 99 பேரை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நீக்க அந்த கட்சியின் செயற்குழு ஏகமனதாக தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# சிறிகொத்தா கூட்டத்தில் சலசலப்பு!

கொழும்பு, ஜூன் 9

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை சிறிகொத்தாவில் இடம்பெற்ற கூட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

ஐ.தே.க தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் தலைவர்களை சந்தித்து ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார். பொதுத் தேர்தல் மற்றும் கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெளிவுப்படுத்தியதன் பின்னரே இந்த அமையின்மை ஏற்பட்டுள்ளதுடன்ரணில் விக்கிரமசிங்க கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளார். (ஒ.5)

# ஜனாதிபதியின் பெயரை பயன்படுத்தி அழுத்தம்!

## அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

கொழும்பு, ஜூன் 9

ஜனாதிபதியின் பெயரைப் பயன்படுத்தி அரச நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் தொடர்பாக உடனடியாக அறிவிப்பதற்கு தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

சில மோசடிகாரர்கள் தமது நோக்கங்களை அடைவதற்காக ஜனாதிபதியின் பெயர், போலியாகத் தயாரித்த கையொப்பம், போலியான கடிதத் தலைப்பு என்பவற்றைப் பயன்படுத்தி அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசு கூட்டுத்தாபனங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்கு அழுத்தங்களைக் கொடுப்பது தொடர்பாகத் தகவல்கள் கிடைகின்றன.

எவரேனும் ஜனாதிபதியின் பெயரைப் பயன்படுத்தி அழுத்தங்களை மேற்கொள்வார்களேயானால் அது தொடர்பாக ஜனாதிபதியின் அலுவலகத்தில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கே.பீ.எகொடவெலவுக்கு (பணிப்பாளர் நாயகம், உள்ளக நிர்வாகம்) 0112354479/ 0112354354 என்ற இலக்கங்கள் ஊடாக அறிவிக்க முடியும். என்றுள்ளது. (ஏ)

# தமிழினத்துக்குத் துரோகம் இழைக்காது கூட்டமைப்பு

## முன்னாள் எம்.பி. கூறுகிறார்



**மட்டக்களப்பு, ஜூன் 9**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது செயற்பாடுகள் எப்போதும் தமிழினத்திற்குப் பாதகமாகவோ, துரோகமாகவோ அமையவில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியாக, தமிழர் விடுதலைக் கூட்டணியாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக காலத்தின் தேவைக்கேற்ப எமது கட்சியானது, மாற்றத்துடன் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இக்கட்சி எவற்றைச் செய்தது என்பதை பல தடவைகள் நாம் தெளிவுபடுத்தியுள்ளோம் அதேபோல் எமது கட்சி எவற்றைச் செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது.

குறிப்பாக ஒடுக்கப்பட்ட தமிழர்களின் விடுதலைக்காகச் செயற்பட்ட தமிழரின் விடுதலைப் போராட்டத்தை போரின் அதிகார வர்க்கத்திடம் காட்டிக்கொடுத்து அழிப்பதற்கான துரோகத்தை நாம் செய்யவில்லை, போரின் அடிப்படைவாத அதிகார வர்க்கத்தின் தேவைக்காக, அவர்களின் எடுபிடிகளாக இருந்து தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள், தொண்டர் அமைப்பினர் போன்றவர்களைக் கடத்தவுமில்லை, காணாமல் ஆக்கவுமில்லை. அதற்கும் மேலாக தமிழ்ப் போராளிகளைக் காட்டிக் கொடுக்கவோ, கொல்லவோ, கைதிகளாய் சிறைகளுக்குள் தள்ளவோ இல்லை.

எல்லைக் காவலர்களாகக் காத்து நின்ற போராளிகளைக் காட்டிக் கொடுத்து அவர்களை அழித்ததன் மூலம், வடகிழக்கில் போரின் குடியேற்றம் நடைபெறுவதற்கான கதவுகளைத் திறந்து விடவுமில்லை. உழைப்புவாத, பிழைப்புவாத, சுயநல அரசியலுக்காக சோரம்போய், பேரினவாதிகளிடம் தமிழர்களை அடமானம் வைக்கவோ, விற்கவோ முற்படவில்லை. அத்துடன் தமிழ் அரசியல் கைதிகளால் சிறைகளை நிரப்பவோ, விடுதலைக்குத் தடையாகவோ இருக்கவில்லை. தமிழர்களின் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை இராணுவம் ஆக்கிரமிப்பதற்குக் கைக்கூலியர்களாகவும் காட்டிக் கொடுப்பர்களாகவும் இருக்கவில்லை. போரின் அடிப்படைவாத அதிகார வர்க்கத்தின் எடுபிடிகளாகவும், அடிவருடிகளாகவும் மாறி, தமிழர் பற்றியதும், தமிழர் போரியல் பற்றியதுமான தகவல்களை விற்றுச் சம்பளம் பெறுபவர்களுமில்லை, சலுகைகள் பெறுபவர்களுமில்லை. மொத்தத்தில், எமது தமிழினத்திற்குப் பாதகமாகவோ, துரோகமாகவோ எமது கட்சியினரின் நடவடிக்கைகள் அமையவில்லை. முக்கியமாக எமது எதிராளர்களிடம் எமது இனத்தைக் காட்டிக் கொடுக்கவுமில்லை - என்றார். (ப)

## கொழும்பில் தங்கியிருப்போர் விவரங்கள் பெறப்பட்டன

கொழும்பு, ஜூன் 9

கொழும்பு மாவட்டத்தில் தற்காலிகமாக தங்கியிருக்கும் நபர்கள் தொடர்பில் தகவல் பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கடந்த 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய கொழும்பு மத்திய பகுதி, வடக்கு, தெற்கு, நுகேகொட மற்றும் கல்கிஸ்ஸ பொலிஸ் பிரிவின் 17 பிரிவுகள், 60 கிராம சேவகர் பிரிவுகளில் தற்காலிகமாக தங்கியிருக்கும் நபர்கள் தொடர்பில் தகவல் பெறப்பட்டுள்ளது. இதுவரை தற்காலிகமாக தங்கிருக்கும் 37 ஆயிரத்து 867 பேரின் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 9

கெப் ரக வாகனமும் லொறியும் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கொழும்பு - கண்டி பிரதான வீதி யக்கல பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

விபத்தில் 35 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார் என்று யக்கல பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த கெப் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் வந்த லொறி ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்து தொடர்பில் யக்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## தீப்பற்றி எரிந்தது மோ.சைக்கிள்

### வீதியில் பயணித்தபோது சம்பவம்

பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றியதில் அதில் பயணித்தவர் பாய்ந்ததில் சேதம் எதுவும் இன்றி தப்பித்துள்ளார். மோட்டார் சைக்கிள் முற்றாக தீயில் எரிந்து கருகியுள்ளது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு நகர் வேதாரணியம் வீதியில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஏறாவூர் பிரதேசத்தில் இருந்து வேதாரணியம் வீதி வழியாக பயணித்த போது மோட்டார்சைக்கிள் திடீரென தீப்பற்றியது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்த 40 வயதுடைய நபர் வாகனத்தை விட்டு பாய்ந்துள்ளார். மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்து கருகியது. சம்பவ இடத்துக்கு வந்த மட்டு தலைமை பொலிஸார் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (ஐ)

## திருமண ஆராதனைகளுக்கு மேல் மாகாணத்தில் அனுமதி

கொழும்பு, ஜூன் 9

மேல் மாகாணத்தில் தேவாலயங்களில் திருமண ஆராதனைகள் நடத்த அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் சுகாதார அதிகாரிகள் வழங்கிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றினால் மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமூகத்திற்குள் கொரோனா வைரஸ் பரவுவதனைத் தடுப்பதற்காக திருமணங்களில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை நூறு பேராக மட்டுப்படுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் விதிமுறைகளுக்கமைய கைகளை கழுவுதல், முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளிகளை பின்பற்றும் நடவடிக்கைகளை கண்டிப்பாகக் கடைப்பிடித்துதிருமணத்தை நடத்த கொழும்பு பேராயர் அலுவலகம் திட்டமிட்டுள்ளது. (ம)

## ஜனநாயகம் என்ற போர்வையில் ஏதேச்சதிகாரம் வேண்டாம்

### *திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்து*



கொழும்பு, ஜூன் 9

ஜனநாயகம் என்ற போர்வையில் ஏதேச்சதிகாரத்தை நோக்கிப் பயணிப்பதற்கு இந்த அரசு முயற்சிக்கின்றது. இதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். அத்துடன், வாக்காளர்கள் உட்பட தேர்தலுடன் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி சுதந்திரமாக தேர்தல் நடைபெறுவதற்கான சூழ்நிலையை அரசு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலானது நீதியாகவும், நியாயமாகவும் நடைபெறவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போதைய சூழ்நிலையில் வாக்காளர்கள், தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடும் அரசியல்வாதிகள், வாக்கெண்ணும் அதிகாரிகள் உட்பட தேர்தலுடன் சம்பந்தப்படும் அனைத்துத் தரப்பினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். அதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்கவேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும். இது விடயத்தில் தேர்தல் ஆணைக்குழுவும் கவனம் செலுத்தவேண்டும்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே நாம் தேர்தலை எதிர்கொள்கின்றோம். எனினும், ஜனநாயகம் என்ற போர்வையில் இதர தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கின்றது. இதற்கு இடமளிக்கமுடியாது. ஆகவே, பக்கச்சார்பற்ற வகையில் நீதியாகவும், சுதந்திரமாகவும் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே எமது தரப்புக் கோரிக்கையாகும்- என்றார் (ப-44)

### *ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்*

## கைதான சுங்க அதிகாரி இரகசியமாக விடுதலை

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முக்கிய சந்தேகநபர் எனத் தெரிவித்து குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் சுங்க அதிகாரி ஒருவர் ஏப்ரலில் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவர் கடந்த வாரம் இரகசியமான முறையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 9 (1) கீழ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன வழங்கிய உத்தரவுக்கு அமைய அந்த நபரை தடுத்து வைத்து விசாரணைகள் நடத்தப்பட்டன. இருந்த போதிலும் அவர் ஈஸ்டர் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டுள்ளமைக்கான சாட்சியங்கள் எதனையும் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தால் கண்டறிய முடியாமல் போயுள்ளது என்றும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. (ம)

# 2015 இல் தோல்வி வரும் என்று முன்கூட்டியே அறிந்திருந்தேன்!

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 9**

**"2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவேன் என்பதை முன்கூட்டியே அறிந்து வைத்திருந்தேன். இது குறித்து குடும்ப உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தியிருந்தேன்." என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



மஹிந்த ராஜபக்ஷவின் 50 வருடங்கள் அரசியல் பயணம் தொடர்பில் சுயாதீன தொலைக்காட்சியில் நடைபெற்ற அனுபவ பகிர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் 18 ஆவது திருத்தச்சட்டத்தை உருவாக்குமாறு பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸிடம் கோரியிருந்தேன். எனினும், ஒருவர் இரண்டு தடவைகளே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடலாம் என்ற விடயம் மாற்றப்பட்டது. சிலர் இதனை விமர்சித்தனர். மேலும் சிலர் சரியான முடிவு என்றனர். எது எப்படியே 19ஆவது திருத்தச்சட்டம் ஊடாக இவை அனைத்தும் மாற்றியமைக்கப்பட்டன.

நான் அமைச்சராக இருந்தபோது ஜோதிடர் ஒருவர் எனக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார். எந்தக்காலப்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் ஆவேன், எந்தக் காலப்பகுதியில் பிரதமராவேன், எப்போது ஜனாதிபதியாவேன் போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. குறிப்பாக 2015 இல் வீட்டுக்கு செல்ல வேண்டிவரும் என்றும் கூறப்பட்டிருந்தது. அதேபோல் 2018 இல் மீண்டெழுவேன் என்றும் அந்த கடிதத்தில் ஆருடம் கூறப்பட்டிருந்தது.

நான் இந்தியாவுக்கு சென்றிருந்தபோதும் இதே விடயத்தை ஜோதிடர் ஒருவர் கூறினார். 2015 இல் வீடு செல்லநேரிடும் என்பதையும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

2015 இல் தோல்வியடைவேன் என்று எனது குடும்பத்தாருக்கும், ஏனையோருக்கும் நான் முன்கூட்டியே அறிவித்திருந்தேன். இதன் காரணமாகவே கௌரவமாக வெளியேறினேன். ஜோதிடம் மீது அதிக நம்பிக்கை இல்லை. ஆனால், கூறப்படும் விடயங்களை அவதானிப்பேன். 2015 இல் முன்கூட்டியே தேர்தலுக்கு செல்வதை பலரும் எதிர்த்தனர். ஆனால், செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது." - என்றார். (து-44)

# லசந்த படுகொலைக்கும் எமக்கும் தொடர்பில்லை

## பின்னணி என்னவென்று மக்களுக்கு தெரியும் என்கிறார் மஹிந்த

கொழும்பு, ஜூன் 9

ஊடகவியலாளர் "லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கும் அப்போது எனது தலைமையில் இருந்த அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது." என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 50 வருடங்கள் அரசியல் பயணம் தொடர்பில் சுயாதீன தொலைக்காட்சியில் நடைபெற்ற அனுபவ பகிர்வு நிகழ்ச்சியில், "ஊடகவியலாளர்களுக்கு எதிராக செயற்பட்டீர்கள்" என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"லசந்த விக்கிரமதுங்க என்னை சந்திப்பதற்கு இரவில் வருவார். அவரின் பாதுகாப்புக் கருதி 'புள்ளட்புரூவ்' காரிலேயே அவரை நான் திருப்பி அனுப்பி வைப்பேன். ஏனெனில், அவருக்கு எதிராக செயற்படும் குழுவொன்று இருந்தது.

மேலும் சில ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர். இவற்றின் பின்னணியில்செயற்பட்டவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்கு தெரியும். பெயர் குறிப்பிட்டு ரணில் விக்கிரமசிங்ககூட நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார். எணவே, அரசின் தேவைகளுக்காக இவை இடம்பெறவில்லை. ஊடகவியலாளர்களை ஒடுக்கவேண்டிய தேவையும் எமக்கு இருக்கவில்லை." - என்றார். (து-44)

# ரூ.5,000 கொடுப்பனவு வழங்கப்படவில்லை

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு ரிஷாத் மஹிந்தவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 9

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கு, 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க தடையாக இருப்பவர்கள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தி, மக்களுக்கு கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

பிரதமருக்கு அவர் எழுதிய கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளம், கல்பிட்டி, முந்தல், வணாத்தவில்லு உள்ளிட்ட பிரதேச செயலகப் பிரிவில் வாழும் மக்களுக்கு 5ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதில் இழுபறி நிலை காணப்பட்டது. அதனையடுத்து, 'வடக்கு இடம்பெயர்ந்த மக்களின் அமைப்பு' எடுத்துக்கொண்ட முயற்சியால், கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் அதுவும் பயனளிக்கவில்லை.

நாட்டின் பிரதமர் என்ற வகையில், தேவையான பணிப்புரையை அரச அதிகாரிகளுக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுள்ளார். (து)

# அரசியலுக்காக முஸ்லிம்களை தவறான வழிக்கு தள்ளுகிறார்

## முஸ்தபா மீது அஷாத்சாலி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 9

தனது சுயநலத்துக்காகவும், எதிர்கால அரசியலில் இருப்பை நிலைப்படுத்துவதற்காகவும் முஸ்லிம் மக்களை தவறான வழியில் இட்டுச்செல்ல முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா முயற்சிக்கின்றார் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத்தேர்தலில் முஸ்லிம்கள் மொட்டுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டியது தார்மீகக் கடமையென்று பைசர் முஸ்தபா கூறியிருக்கிறார்.

ஜனாஸா எரிப்பு விடயத்தில் சமூகத்துக்கு இழைக்கப்பட்டு வரும் அப்பட்டமான அநியாயங்களை பைசர் முஸ்தபா போன்றவர்கள் கண்டுகொள்ளவில்லை.

இந்தநிலையில் கிழக்கு மாகாணத்தில் பௌத்த சின்னங்களை பாதுகாப்பது என்ற பெயரில், தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வரலாற்று பூமியை கபளீகரம் செய்ய எடுக்கப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் கிழக்கு மாகாணத்தை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுயற்சிக்கும் பேரினவாதிகளின் நகர்வுகளை பைசர் முஸ்தபா அறிவாரா? என்றும் அஷாத் சாலி கேள்வியெழுப்பியுள்ளார். (து)

# ஆலோசனைப்படி நடந்திருந்தால் கொரோனா பெருகியிருக்காது!

## ரணில் விக்கிரமசிங்க விசனம்

கொழும்பு, ஜூன் 9

கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்த தான் வழங்கிய ஆலோசனைகளை அரசு பின்பற்றியிருந்தால் மே மாத இறுதியில் நாட்டை வழமையான நிலைமைக்கு கொண்டு வந்திருக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்த காலப்பகுதியில் நாளொன்றுக்கு 5ஆயிரம் வரையிலான பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அரசை வலியுறுத்தியிருந்தோம்.

மார்ச் 24 ஆம் திகதி நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் 102 ஆக காணப்பட்டனர். இன்று தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 814 ஆக அதிகரித்து, 11 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. தனது வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமையே இதற்கு காரணம் என்றும் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் இதுவரை 75ஆயிரத்து 239 பரிசோதனைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்படிப் பார்த்தால் நாளொன்றுக்கு 690 பரிசோதனைகளே இடம்பெறுகின்றன.

அதன் பிரதிபலனாகவே தற்போது கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 800 ஐக் கடந்துள்ளது. உரிய வகையில் பரிசோதனைகளை நடத்தியிருந்தால் தொற்றாளர்களை 500 க்குள் கட்டுப்படுத்தியிருக்க முடியும். அரசியல் ரீதியான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதே அரசின் நோக்கமாக இருந்தது - என்றும் விக்கிரமசிங்க தெரிவித்தார். (து)



'விதையனைத்தும் விருட்சமே' அமைப்பின் செயற்றிட்டத்தில் நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தில் அண்மையில் குருதிக்கொடை நடத்தப்பட்டது. இதில் 51 பேர் கலந்துகொண்டு குருதி வழங்கினர். (து)



### மணல் கொள்ளையர்கள்
# ரயர்களை எரித்து பெரும் அச்சுறுத்தல்
### *தர்மபுரத்தில் சம்பவம்*

கிளிநொச்சி, ஜூன் 9

வயல் காணிகளில் கள்ள மணல் அகழ்பவர்கள், உரிமையாளர்களை காணிக்குள் இறங்கவிடாது ரயர்களை எரித்து அச்சுறுத்திய சம்பவம் கிளிநொச்சி தர்மபுரத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளை நிலங்களைக் கொண்ட வயல் காணியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு கோரி வந்த காணி உரிமையாளர் ஒருவர் அண்மையில் தாக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணம், வரணிப் பகுதிகளில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை தர்மபுரத்தில் உள்ள தமது காணிகளுக்குச் சென்றனர். அவர்களை காணிகளுக்குள் இறங்கவிடாது வீதியில் ரயர்களைப் போட்டு கொளுத்தி அச்சுறுத்தினர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர் சம்பவ இடத்துக்குச் சென்றனர்.

அவர்கள் மணல் அகழ்வு இடம்பெற்ற பகுதிகளையும் பார்வையிட்டனர். தமது காணியை பாதுகாத்துத் தருமாறு மக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். தர்மபுரம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சம்பவம் தொடர்பாக முறைப்பாட்டையும் காணி உரிமையாளர்கள் பதிவு செய்தனர். (ப-6)

### வடக்கில் நேற்றைய தினமே
# ஊரடங்கின் பின்னர் முதல் ரயில் சேவை

வவுனியா, ஜூன் 9

**சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வடக்கில் இருந்து கொழும்பு நோக்கிய ரயில் சேவை நேற்று இடம்பெற்றது.**



யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட யாழ். தேவி வவுனியாவில் இருந்து நேற்று காலை 8.10 மணியளவில் கொழும்பு நோக்கிச் சென்றது.

இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பயணிகள் ஏற்றப்பட்டமையுடன் ரயில் நிலையத்தில் சமூக இடைவெளியும் பேணப்பட்டது.

வவுனியா ரயில் நிலைய உத்தியோகத்தர்கள் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பயணிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்தனர்.

மார்ச் 20ஆம் திகதி ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் ரயில் சேவை வடக்கில் நேற்று இடம்பெற்றது. இரு மாதங்களுக்கு மேலாகப் பாவனையற்றுக் காணப்பட்ட ரயில்வே தண்டவாளங்களில் காணப்பட்ட புற்களைத் துப்புரவு மேற்கொள்ளும் பணிகளில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது. (ப-18)

# யாழ். மாநகரத்தில் டெங்கு ஒழிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். மாநகர பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புப் பணிகள் நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு நடைபெறும் என்று மாநகர பதில் முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

டெங்கின் தாக்கம் கூடுதலாக காணப்படும் நாவாந்துறை மற்றும் யாழ். நகர் பகுதியில் ஒழிப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். ஜே/75, ஜே/76 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் நேற்று டெங்கு ஒழிப்பு முன்னெடுக்கப்பட்டன.

இன்று செவ்வாய்க்கிழமை ஜே/80, 81,83 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும், நாளை புதன்கிழமை ஜே/85,87,88 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்கள் உட்பட 50 க்கும் மேற்பட்டோர் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் சகலரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று மாநகர பதில் முதல்வர் கேட்டுள்ளார். (க-17)

### கதிர்காம ஆலய ஆடிவேல் எசலவிழா

கண்டி, ஜூன் 9

ருஹுனு மகா கதிர்காம ஆலயத்தின் ஆடிவேல் எசல விழாவை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை முகூர்த்த கால் நடும் சடங்கு நடைபெற்றது. எசல விழா எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதி தொடங்கி பிரமாண்ட ஊர்வலத்துடன் ஓகஸ்ட் 4 ஆம் திகதியன்று நிறைவடையவுள்ளது. (ஐ)





# மன்னார் பேருந்து நிலையம் நகர சபையிடம் கையளிப்பு

மன்னார், ஜூன் 9

மன்னாரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு மன்னார் நகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

130 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் பஸார் பகுதியில் சகல வசதிகளுடன் பஸ் நிலையம் அமைக்கப்பட்டது. பஸ் நிலையம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணியளவில் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளினால் திறந்து வைக்கப்பட்டது. மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் மேலதிக செயலர் எஸ்.குணபாலன் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதிகள் இணைந்து பேருந்து நிலையத்தின் பெயர் பலகையை திரைநீக்கம் செய்து வைத்தனர். (ப-56)

# வயல் காணியில் முன்னெடுக்கப்படும் கட்டடப் பணியை நிறுத்த உத்தரவு

வவுனியா, ஜூன் 9

வவுனியா பட்டாணிச்சூர் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள வயல் காணியில் அனுமதியின்றி கட்டப்படும் வர்த்தக நிலையத்தின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமாரால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் எழுத்திலான அனுமதியின்றி நெற்காணி பதிவேட்டில் பதியப்பட்டுள்ள நெற்காணியில் கட்டுமானத்தை முன்னெடுப்பது 2011ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்த) சட்டத்தால் திருத்தப்பட்ட 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 32ஆம் பிரிவின் உப பிரிவு (1) இன் பிரகாரம் குற்றச் செயலாகும்.

இதன் பிரகாரம் பட்டாணிச்சூர் புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள நெற்காணியில் அனுமதியின்றி முன்னெடுக்கப்படும் கட்டடப்பணிகளை உடனடியாக நிறுத்துமாறும் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னதாகக் கட்டடத்தை அகற்றுமாறும் வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்கத் தவறின் சட்டத்தின் பிரகாரம் பொலிஸாரின் உதவியுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்வதுடன் நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் கைப்பற்றப்படும் எனவும் தவறொன்றை இழைத்த குற்றவாளியாகக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் ஒரு லட்சம் ரூபாவுக்கு குறையாத குற்றப்பணம் செலுத்த வேண்டிவரும் என்றும், அல்லது ஆறு மாதங்கள் சிறைத்தண்டனைக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் அனுப்பியுள்ள அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-18)

## உற்பத்தித்திறன் விருதுக்கு விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

இந்த வருடத்துக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கான விண்ணப்ப திகதி எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய உற்பத்தித் திறன் செயலக இணையத்தளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

திறன் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் விண்ணப்ப முடிவு திகதி கடந்த மார்ச் 31ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டித் தொடருக்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

எனவே தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டித் தொடருக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்துக்கு கிடைக்கக்கூடியவாறு தங்கள் விண்ணப்ப படிவங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைத்துறை, அரசதுறை, உற்பத்தி மற்றும் சேவைகள் துறை நிறுவனங்கள் இந்தப் போட்டித்தொடருக்கு விண்ணப்பிப்பதற்கான தெளிவூட்டும் செயலமர்வை கடந்த மார்ச் 2ஆம் திகதிவரை மூன்று பிரிவுகளாக யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# முல்லையில் தொழில்சார் பயிற்சி நிறுவனம் திறப்பு

முல்லைத்தீவு,ஜூன் 9

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள படித்த மாணவர்களின் கல்வித் தகமையை அதிகரித்து உயர் தரமான தொழில்சார் பயிற்சிநெறிகளை வழங்கும் நோக்கில், ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் பீனிஸ் லங்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் திறக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலைதேடுபவர்களுக்காக தொழில் பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்பு ,உயர் கல்விக்கான வழிகாட்டல், வெளிநாடுகள் செல்பவர்களுக்கான ஆலோசனைகள், சிறு வியாபார உற்பத்தியாளர்களுக்கான தரச்சான்றுகள், வியாபாரத்தை ஊக்குவித்தல், தொழில் துறையை ஊக்குவித்தல், சந்தைப் படுத்தல், முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், சாரதி அனுமதிபத்திரம் எடுப்பதற்கான ஆலோசனைகள் என்பன இந்த நிறுவனம் ஊடாக வழங்கப்படவுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் எம்.றிப்னஸ் தலைமையில் நடைபெற்ற திறப்பு நிகழ்வில் ஒட்டுசுட்டான் இலங்கை வங்கி முகாமையாளர், முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவன முகாமையாளர் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க-19)

## விபத்து, தாக்குதல்களில் 6 பேர் காயமடைந்தனர்

சாவகச்சேரி, ஜூன் 9

வீதி விபத்தில் காயமடைந்த மூன்று பெண்களும், தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவருமாக 6 பேர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளன.

நாவற்குழியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த 25 வயதுப் பெண்ணும், கைதடியைச் சேர்ந்த 24 வயதுப் பெண்ணும் சாவகச்சேரி வடக்கு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த 28 வயது பெண்ணும் காயமடைந்தனர்.

இதேவேளை, கைதடி நுணாவில் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞரும் கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 40 வயதுப் பெண்ணும் அல்லாரையில் இடம்பெற்ற சம்பவத்தில் 37 வயது குடும்ப பெண்ணும் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பூத்து குலுங்கும் வாகைமரங்கள்

வவுனியா,ஜூன் 9

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் புளியங்குளம் சந்தியில் நடுகை செய்யப்பட்ட வாகை மரங்கள் தற்போது பூத்துக்குலுங்கி வனப்புடன் காட்சியளிக்கின்றன.

மன்னர்கள் காலத்தில், வெற்றியின் அடையாளமாக வாகை மரத்தின் மலர்களையே சூடினர். இந்த வாகை அனைத்துப் பகுதிகளிலும் வளரும் தன்மையுடையதுடன் மண்ணரிப்பை தடுக்கும் தன்மையும் இதற்கு உண்டு என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-110)



## மரவள்ளி தோட்டங்களில் திருட்டுக்கள் அதிகரிப்பு

### காவலிருக்கும் விவசாயிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 9

மரவள்ளி கிழக்கின் விலை அதிகரிப்பை அடுத்து, தோட்டங்களில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய், நீர்வேலி, ஊரெழு பகுதிகளிலுள்ள மரவள்ளி தோட்டங்களில் இவ்வாறு திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

தற்போது மரவள்ளி கிழங்கு கிலோ 140 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது.

திருடர்கள் பட்டப் பகல் வேளையில் தோட்டங்களில் விவசாயிகள் இல்லாத சமயம் பார்த்து, மரவள்ளிக் கிழங்குகளை பிடுங்கி கிழங்கை எடுத்துச் செல்கின்றனர். அதனால் விவசாயிகள் சிலர் தமது தோடங்களில் பகல் வேளையிலும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்துக்கு கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் இருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோளுக்கு இணங்க, போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வாழ்வாதார முயற்சியாக கடை அமைப்பதற்கு தேவையான ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வழங்கப்பட்டன. (க)



சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மரம் நடும் நிகழ்வு மயிலிட்டி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் நேற்று நடைபெற்றது. (த)

### வவுனியாவிலுள்ள

## கல்வியியற் கல்லூரிக்கு புதிய பீடாதிபதி நியமிப்பு

வவுனியா,ஜூன் 9

வவுனியா கல்வியியற் கல்லூரியின் புதிய பீடாதிபதியாக குணரட்ணம் கமலகுமார் நேற்றுப் பதவியேற்றுள்ளார்.

வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக பதவி வகித்த சுவர்ணராஜா ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

இதனையடுத்து அந்த வெற்றிடத்துக்கு குணரட்ணம் கமலகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், வவுனியா கல்வியிற் கல்லூரியின் உப பீடாதியாகவும், ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளராகவும், சாரணியத்தின் வவுனியா மாவட்ட உதவி ஆணையாளராகவும் பதவி வகித்திருந்தார்.

பதவியேற்பு நிகழ்வில் திருமதி கமலகுமார், உப பீடாதிபதிகள், கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-18)



தேர்தலின் பின்னர்

# 19ஆவது திருத்தம் மாற்றப்படும் என்பதில் எந்த மாற்றமுமில்லை

மஹிந்த அணி உறுதி



கொழும்பு, ஜூன் 9

பொதுத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முழுமையாக மாற்றியமைக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுன வெற்றி பெற்று பலமான அரசை அமைக்கும். துரித பொருளாதார முன்னேற்றம், சிறந்த அரசமைப்புத் திருத்தம் ஆகியவை தேர்தல் வெற்றியின் பிரதான செயற்பாடாகக் காணப்படுகிறது. தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்கி பொருளாதாரம் முன்னேற்றப்படும்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முத்துறைகளுக்கு மிடையில் அதிகாரச் செயற்பாடு ரீதியில் முரண்பாட்டைத் தோற்றுவித்தது. நல்லாட்சி அரசின் பிரதான இலட்சணமாகக் கருதப்பட்ட 19வது திருத்தத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையாக விமர்சித்தார். நல்லாட்சி அரசின் பலவீனத்துக்கு இத்திருத்தமே பிரதான காரணியாக அமைந்தது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.

இன்று ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. அரச நிர்வாகத்தின பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலையும் உள்ளது. இதற்கு 19வது திருத்தமே பிரதான காரணம். ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

கடந்த அரசில் அரச தலைவருக்கும், அரசுக்கும் இடையிலான அதிகார முரண்பாடு பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு மூல காரணியாக அமைந்தது. இந்த நிலைமை இன்றும் தாக்கம் செலுத்துகிறது. ஆகவே பலமான அரசை கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும்- என்றார். (ப)

கரைவலைத் தொழிலில்

# வின்ஞ் பயன்படுத்த இடைக்காலத் தடை

கொழும்பு, ஜூன் 9

**கரைவலை மீன்பிடி முறை தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் வரை வின்ஞ் பொறிமுறையைப் பயன்படுத்துவதை இடைநிறுத்துவதாக கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் கரைவலை முறையிலான கடற்றொழிலில் ஈடுபடுவோர் உழவு இயந்திரத்தில் வின்ஞ் பொறிமுறையை பயன்படுத்துவது தொடர்பில் ஆராயும் மீளாய்வுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வின்ஞ் பொறிமுறை பயன்படுத்தப்படுவதனால் பாரம்பரிய சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் கடல் வளத்துக்கு பாதிப்பு ஏற்படுகிறது எனவும் வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு மீனவர் பிரதி நிதிகளினால் குற்றஞ் சாட்டப்பட்டது. அதேவேளை, கரைவலை செயற்பாட்டுக்குத் தேவையான தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு காரணங்களால் உழவு இயந்திரம் மற்றும் வின்ஞ் பொறிமுறை பயன்பாட்டை தெரிவு செய்துள்ளதாகத் தெரிவித்த கரை வலை தொழிலாளர்கள் அதற்காக தாங்கள் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வின்ஞ் பயன்படுத்தப்படுவதால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்கள் தொடர்பில் நாரா எனப்படும் நீர்வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக விஞ்ஞான பூர்வ ஆய்வுகளை மேற்கொண்டு அதனடிப்படையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானம் கடல் வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாத- நியாயமானதாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்- என்றார். (ப)

கொழும்பில் தேங்கியிருந்த

## தபால்கள் யாழுக்கு எடுத்து வரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 9

கொழும்பில் தேங்கியிருந்த தபால் பொதிகள் வாகனம் மூலம் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன. 102 வரையிலான தபால் பொதிகள் இவ்வாறு எடுத்து வரப்பட்டுள்ளன. அவற்றை உடனடியாக தரம் பிரித்து விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டிய தபால்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண பிரதம தபாலகம் தெரிவித்துள்ளது. (ம-17)

## செங்குந்தா சந்தையில் வியாபாரிகள் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

கல்வியங்காடு செங்குந்தா மீன் சந்தையில் தனிநபர் இடைவெளியைப் பேணும் பொருட்டு வியாபாரிகள் குறைக்கப்பட்டுள்ளனர்.

சந்தைக்கு வியாபாரம் செய்வதற்கு 21 வியாபாரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தைக்கு வெளியே ஆடியபாதம் வீதியில் வைத்து மீன்களை வியாபாரம் செய்வதற்கு 25 வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை மாநகராட்சி மன்றத்துக்கு உட்பட்ட சகல சந்தைகளிலும் தனிநபர் இடைவெளி பின்பற்றப்பட்டு சுகாதார விதிகள் கடைப்பிடிக்கப்பட்டும் வருகின்றன. (க-17)

## பேய்ச்சாளை மீனின் விலையில் சரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 9

பாஷையூர் கடற்பரப்பில் மீனவர்களின் வலையில் அதிகளவிலான பேய்ச்சாளை மீன்கள் கடந்த வாரத்தில் சிக்கி கொண்டன. மீனின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. மீன்கள் அதிகளவில் சந்தைக்கு வந்தமையால், அவற்றின் விலை குறைந்து காணப்பட்டது. ஒரு கிலோ பேய்ச்சாளை மீன்கள் 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன. மீன்களின் விலை வீழ்ச்சியைப் பயன்படுத்தி கூடுதலான மக்கள் அந்த வகை மீன்களைப் பெற்றுச் சென்றனர். (க-17)

யாழ். குடாவில்

## மரக்கறி விலை திடீரென ஏற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. சகல மரக்கறி வகைகளும் கிலோ நூறு ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன.

கடந்த மூன்று மாத காலத்தில் மரக்கறி வகைகள் விற்பனை இன்றி அதிகளவில் தேங்கிக் காணப்பட்டன. கடும் வெப்பம் மற்றும் காலநிலை வேறுபாட்டினால் மரக்கறிச் செய்கையும் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில்தான் அநேகமான மரக்கறி வகைக்கு பற்றாக்குறை ஏற்பட்டதோடு அவற்றின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளன என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-17)

# கோத்தாபயவுக்கு வாக்களிக்காததை நினைத்து தமிழர்கள் புழுங்குகின்றனர்

இப்படிச் சொல்கிறார் வாசுதேவ

கொழும்பு, ஜூன் 9

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிக்க முடியாமல் போய்விட்டதே என வடக்கு மக்கள் கவலையுடன் இருக்கின்றனர் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், ஆளுங்கட்சி முக்கியஸ்தருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் முடிவடைந்த பின்னர், தோல்வி உறுதியெனத் தெரிந்தும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே




வெற்றிபெறும் எனக் குறிப்பிட்டனர். வெற்றி பெறட்டும், எவ்வித இடையூறும் செய்யக்கூடாது எனவும், வெற்றியை விடவும் தோல்வியில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும் எனவும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை, தமிழ் மக்களின் மனங்களில் இன்று கவலை இருக்கின்றது. அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எமக்கு அச்சத்தை ஏற்படுத்தியே கோத்தாபய ராஜபக்ஷவுக்கு எதிராக வாக்களிக்க வைத்தனர் என அவர்கள் கருதுகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றால் இங்கு (வடக்கில்) மீண்டும் இராணுவம் குவிக்கப்படும், இடங்கள் கைப்பற்றப்படும், இளைஞர்கள் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்படுவார்கள் என அச்சமூட்டும் வகையில் பரப்புரை முன்னெடுத்தே கோத்தாபய ராஜபக்ஷவுக்கான வாக்குகளைத் தடுத்தனர் என மக்கள் தற்போது கதைக்க ஆரம்பித்துள்ளனர்- என்றார். (ப-44)

# உலக வங்கி வழங்கிய 230 மில்லியன் எங்கே?

## ஐ.தே.க. கேள்வி



கொழும்பு, ஜூன் 9

கொரோனா தடுப்புக்காக உலக வங்கி 230 மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்கியதாக தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அந்த பணத்துக்கு என்ன நடந்தது என்று நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொரோனா வைரஸ் பரவல் ஆரம்பித்த காலப்பகுதியில் நாளொன்றுக்கு ஐயாயிரம் வரையிலான பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அரசை வலியுறுத்துகிறோம். மார்ச் 24ஆம் திகதி நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் 102 ஆகக் காணப்பட்டனர். ஆனால் இன்று தொற்றாளர்களின் எண்ணிக்கை 1814 ஆக அதிகரித்து, 11 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. எனது வேண்டுகோளுக்கு செவி சாய்க்காமையே இதற்கு காரணம். பெப்ரவரி 18 ஆம் திகதி முதல் இதுவரை 75,239 பரிசோதனைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அப்படி பார்த்தால் நாளொன்றுக்கு 690 பரிசோதனைகளே இடம் பெறுகின்றன.

அதன் பிரதிபலனாகவே தற்போது கொவிட் -19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 1800 ஐ கடந்துள்ளது. உரிய வகையில் பரிசோதனைகளை நடத்தியிருந்தால் தொற்றாளர்களை 500 க்குள் கட்டுப்படுத்தியிருக்க முடியும். அரசியல் ரீதியான நம்மைகளைப் பெற்றுக் கொள்வதே அரசின் நோக்கமாக இருக்கிறது. இதற்கு இந்தியாவிடமிருந்தும் சீனாவிடமிருந்தும் நன்கொடைகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

உலக வங்கி 230 மில்லியனை நன்கொடையாக வழங்கியுள்ளது. அந்தப் பணத்திற்கு என்ன நடந்தது என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ப)

முத்தரிப்புத்துறையில்

# கரையோர அரிப்பை தடுக்க நடவடிக்கை

புத்தளம், ஜூன் 9

புத்தளம், முத்தரிப்புத்துறையில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை தடுக்க கடலோர பாதுகாப்புத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் ஆரச்சிகட்டுவ பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்தரிப்புத்துறையிலுள்ள 135 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500 பேர் வாழ்கின்றனர். முத்தரிப்புத்துறை கிட்டத்தட்ட ஒரு தசாப்த காலமாக கடல் அரிப்புக்கு உள்ளாகி வருகிறது. இதனால் குறித்த தீவின் கடலோர பகுதிகள் கடுமையாக சேதமடைந்து வருகின்றன.

இதனால் அதைத் தடுக்க கடலோர பாதுகாப்புத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. முத்தரிப்புத்துறையில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் இந்தப்பகுதி மீனவர்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப)

# பஸ்களின் திருத்தத்துக்கு 3 இலட்சம் ரூபா கடனுதவி

கொழும்பு,ஜூன் 9

கொரோனாத் தொற்றுக் காரணமாக சேவைகளற்று நிறுத்தப்பட்டிருந்த பஸ்களின் திருத்தப்பணிகளுக்காக மூன்று இலட்சம் ரூபா கடன் வசதியை வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் போக்குவரத்து அதிகாரிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. அதற்கமைய பஸ்களின் உரிமையாளர்களிடம் உள்ள வீதி அனுமதிப்பத்திரத்தை உத்தரவாதமாக வைத்து கடன் தொகையைப் பெற்றுக் கொள்ளும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து எதிர்வரும் தினங்களில் வங்கிகளுடன் கலந்துரையாடப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (க)

# 18 அடி நீள புள்ளி சுறா சடலமாக ஒதுங்கியது

இராமநாதபுரம், ஜூன் 9

இராமநாதபுரம் ஆற்றங்கரை கடற்கரையில் 18 அடி நீளமும் சுமார் 700 கிலோ நிறையும் கொண்ட புள்ளி சுறா மீன் உடலில் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கரையொதுங்கியுள்ளது. பாக்ஜல சந்தி பகுதியான ஆற்றங்கரை கடற்கரையில் இந்த மீன் உள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய வனத்துறையினர் அதை பார்வையிட்டனர்.

'வேல்ஸார்க்' எனப்படும் அரியவகை சுறாமீன் அது என்று தெரிவிக்கப்பட்டது.

ஆழ்கடல் பகுதியில் மட்டும் வசிக்கக்கூடிய இந்த பிரம்மாண்ட மீன் படகுகளை புரட்டிப்போடும் அளவுக்கு பலம் வாய்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கப்பல்களில் மோதி காயம் ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று வனத்துறையினர் சந்தேகம் தெரிவித்திருந்தனர்.

இறந்த மீனை ஜே.சி.பி இயந்திரம் மூலம் இழுத்து கடற்கரைக்கு கொண்டுவந்தனர்.

இந்த ஆண் சுறா மீன் சுமார் 35 தொடக்கம் 40 வயதை கொண்டது. காற்றின் வேகம் அதிகமாக காணப்பட்டமையால் குறித்த புள்ளிச் சுறா பலவீனமாக காணப்பட்டமையால் பாறையில் மோதி உயிரிழந்திருக்கலாம் கால்நடை வைத்தியரின் பிரேத அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-56)



### எரிப்பதற்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 9

கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுத்து, எரிப்பதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்குகளின் விசாரணை எதிர்வரும் ஜூலை 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பிறிதொரு வழக்கின் விசாரணை எதிர்வரும் ஜூலை 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# கொரோனா சலுகை எவருக்கும் கிடையாது!

## சகலரும் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்கிறார் தினேஸ்

கொழும்பு, ஜூன் 9

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு முன்னெடுத்துள்ள பாதுகாப்பு, சுகாதார நடவடிக்கைகளை நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் முழுமையாகப் பின்பற்ற வேண்டும். வெளிநாட்டு இராஜதந்திரிகள் எவருக்கும் தற்போதைய நிலையில் சிறப்புச் சலுகை வழங்க வேண்டிய தேவை அரசுக்கு கிடையாது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவிற்கு கிடைக்கப்பெற்ற மக்களாணையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது பிரதான பொறுப்பாக உள்ளது.

புதிய நாடாளுமன்றம் தோற்றம் பெற்றால் மாத்திரமே தற்போது தோன்றியுள்ள அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான திகதி குறித்தொதுக்கப்பட்டது. நாடாளுமன்றம் அதியுயர் அதிகாரமுடையது. ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படும் நிலையான அரசு நாடாளுமன்றத்தில் தோற்றம் பெற வேண்டும். தேர்தல் ஆணைக்குழு பொதுத்தேர்தலை நடத்தும் திகதியையும், வேட்பாளர்களின் விருப்பு இலக்கத்தையும் உடனடியாக வெளியிட வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பொதுத்தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதாக அமையக்கூடாது. கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அரசு முன்னெடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாட்டுக்குள் வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், மற்றும் தூதுவர்கள் கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என இலங்கையில் உள்ள அனைத்து தூதரகங்களுக்கும் விசேட சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

ஒரு சில வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தூதுவர்கள் தங்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொண்டார்கள். கொரோனா வைரஸ் பரவலை அரசு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது. நாட்டில் தற்போது செயற்படுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். வெளிநாட்டு இராஜதந்திரிகள் மாத்திரம் விதிவிலக்கல்ல. அரசு எத்தரப்பினருக்கும் சிறப்புச் சலுகை வழங்காது- என்றார். (ப)

# மிலேனியம் சவால் அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும் அரசு

## கோருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 9

மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு அரசு தயாராகிக் கொண்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகளின் உண்மைத் தன்மை தொடர்பில் அரசு தெரியப்படுத்த வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலாளர் பி.பி.ஜயசுந்தரவுக்கு நேற்று திங்கட்கிழமை அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில் உள்ளதாவது

ஜனாதிபதித் தேர்தலில் பின்னர் தற்போதைய அரசாங்கம் மிலேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்காக அமைச்சரவையின் அனுமதியுடன் குழுவொன்றை நியமித்தது. மில்லேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டு தற்போது 6 மாதங்களை அண்மித்துள்ள நிலையில் இது வரையில் அந்த குழுவின் இறுதி அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளதாக அறியக் கிடைக்கவில்லை. அதன் இறுதி பரிந்துரைகள் என்ன என்பது பற்றி நாட்டுக்கு தெரியப்படுத்தவில்லை.

ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தொடர்பிலும் தெரியப்படுத்துமாறு நாட்டு பிரஜை என்ற ரீதியில் கேட்டுக் கொள்கின்றேன். என்றுள்ளது. (எ)

# நாயைக் கடத்தி 25,000 ரூபா கப்பம்

## அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாயை கடத்தி சென்ற இருவர் 25 ஆயிரம் ரூபாய் கப்பம் பெற்ற பின்னர் நாயை உரிமையாளர்களிடம் கையளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலி பகுதியில் வசித்து வரும் ஒரு தம்பதியினர் "பொமேரியன்" இன நாய் ஒன்றினை மிக செல்லமாக வளர்த்துள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் அவர்களின் வளர்ப்பு நாய் வீட்டில் நின்ற நிலையில் திடீரென காணாமல் போயுள்ளது.

அந்தத் தம்பதியினர் எங்கு தேடியும் நாய் கிடைக்காததால் மனமுடைந்திருந்த நிலையில், அன்று மாலை அதே ஊரைச் சேர்ந்த இரு இளைஞர்கள் அவர்களின் வீட்டுக்கு வந்து உங்கள் நாயை ஒருவர் பிடித்து வைத்துள்ளார். அவருக்கு 25 ஆயிரம் ரூபா பணம் கொடுத்தால் நாயை தருவதாக அவர் கூறுகின்றார் என்று தெரிவித்துள்ளனர்.

தம்பதியினரும் அதற்குச் சம்மதித்து அவர்கள் கேட்ட பணத்தை கொடுத்துள்ளனர். அடுத்த அரை மணிநேரத்தில் குறித்த இளைஞர்கள் அவர்களின் நாயைக் கொண்டு வந்து ஒப்படைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமது செல்லப்பிராணிக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டு விடுமோ எனும் அச்சத்தில் அவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

**JOB OPPORTUNITY TO JOIN CENTRE FOR CREATIVITY & INNOVATION (CCI) - OFFICE**

**MANAGER**

We are a non profit organisation to invent new education to promote creativity and innovation skills in Lanka. We are based in Palaly Road, Jaffna. We have established an innovation museum, research & invention centre and cycling club in order to fulfill our aim.

We are looking for an energetic, creative and multilingual person to join us as soon as possible.

You will be welcoming and being a guide to everyone visiting us. This is a challenging position which requires IT skills, social media skills and ability to do multi tasks. You will be someone with, good sense of humour, willingness to learn new skills, good communication skills and go extra miles to serve our country through our organisation. You will also be doing general office duties, sell our products and services such as binding, copying etc. This is 5 days a week work during normal office hours. Salary in the range of RS25-30K. To apply to this position please send an email with, brief description of why you are interested in this position, what would you bring to this organisation, about you, with enclosing your CV. Email:

**E-mail: visionnext100@gmail.com**
**Tel : 021 4341515**
**Mob : 075 7417332**

# முகமாலையில் இன்று அகழ்வு

கிளிநொச்சி யூன் 9

முகமாலை பகுதியில் எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்ட பகுதி நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இன்று மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி, முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்டு வரும் பகுதியில், அந்த நிறுவனப் பணியாளர்களால் கடந்த 2ஆம் திகதி மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மனித எலும்புக் கூடுகள், துப்பாக்கி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரின் சீருடை என்பன மீட்கப்பட்டன. அது தொடர்பாகப் பளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் அங்கு அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். அதற்கமைய கடந்த 26ஆம் திகதி அங்கு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மனித எலும்பு எச்சம், துப்பாக்கிகள், ரவைகள், மகசீன்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அடையாளத் தகடு, கைக்குண்டு என்பன மீட்கப்பட்டன.

அதன்பின்னர் கடந்த 2ஆம் திகதி அங்கு அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றைய தினமும் மனித எலும்பு எச்சங்கள் மீட்க ப்பட்டன. மூன்றாம் கட்டமாக இன்று அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (எ-6)

*மர்மமான...*

உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு அவருக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை இது தொடர்பாக வவுனியாப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

வவுனியா திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை உடற்கூற்றுச் சோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுச் சோதனையிலும் இளைஞரின் இறப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக பரிசோனைக்காக உடற்கூறுப் பாகங்கள் பெறப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஏ-110)

*இருதரப்பு...*

மகாறம்பைக்குளம், ரம்பவெட்டி பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றுக்கும், அயல் குடும்பத்துக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டு கைகலப்பாக மாறியது என்றும், அப்போது 29 வயதான இளம் குடும்ப பெண் ஒருவருக்கு மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு தீ வைக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அயலவர்களால் மீட்கப்பட்ட பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பெண்ணுக்கு தீ வைத்தது யார் என்பது தொடர்பில் மாமடு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-18)

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை தங்கராசா

பூதவராயர் வீதி, சின்னத்தாளையடி, தர்மக்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தங்கராசா நேற்று (08.06.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் கணவரும், தயாமோகன், சந்திரமோகன், கிரிதரன், கிரிதாஸ், ரகுதாஸ் ஆகியோரின் தந்தையும், தர்சினி, தியாகினி (ஆசிரியை-கிளி/பளை மத்திய கல்லூரி), சிவசர்வினி, பிரசாந்தினி ஆகியோரின் மாமனாரும், சங்கவி, அஸ்வின், அட்சரன், ஆருதன், அட்சயன் ஆகியோரின் பேரனும், செல்லம்மா, அன்னலட்சுமி, செல்வமலர், சாந்தநாயகி (ஆசிரியை, கிளி/பளை மத்திய கல்லூரி) ஆகியோரின் சகோதரனும், வேலுப்பிள்ளை காலஞ்சென்றவர்களான செல்வராசா, கணேஷ் மற்றும் நடேசபிள்ளை, சிவப் பிரகாசம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 8098 121

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி அன்னபூரணம்



மாசார் பளையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அன்னபூரணம் நேற்று (08.06.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தங்கராணியின் அன்புச் சகோதரியும் மவுலேஸ்வரி, குணரஞ்சிதம், குணறஞ்சன், குணறங்கன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம், பிரதாபராஜன், உதயாதேவி, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சன்ஜீவன், சன்ஜியா, சஜிலா காலஞ்சென்ற சரண்யா, அச்சயா, ஆதீஸ், நிஜானன், சாங்கவி, லதுர்ஜிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் விகாஸ், உபாசனா, வாகீஷ், சோமியா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (09.06.2020) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் முடங்குதீவு இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

# 27ஆம் ஆண்டு நினைவலைகளுடன்



மலர்வு
01 . 01 . 1954

உதிர்வு
07 . 06 . 1993

## திருமதி நகுலேஸ்வரி நகுலராசா


திதி:சதுர்த்தி (09.06.2020)

எம் குடும்பத்தின் குலவிளக்கே
எம்மை கடந்து இருபத்தேழு ஆண்டே
இதயம் தொட்ட நினைவுகள்
இன்றும் உமை எண்ணித் தவிக்கின்றன
ஆண்டுகள் பல சென்றாலும் - இன்றும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் - என்றும்
அன்புக் குடும்பமாக.

ராஜன் காட்வெயார்
பருத்தித்துறை.

கணவர் - மு.நகுலராசா
மற்றும் குடும்பத்தினர்.
அம்பன், குடத்தனை.

# மரண அறிவித்தல்



பிறப்பு
03 . 03 . 1948

இறப்பு
08 . 06 . 2020

## ஜோன் ஏபிரகாம் நவரெத்தினம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், 41/13, மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஜோன் ஏபிரகாம் நவரெத்தினம் நேற்று (08.06.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏபிரகாம் சின்னத்துரை எலிசபேத் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜோபு லில்லி தம்பதியரின் மருமகனும், அன்ஜலினாவின் (சுசிலா) பாசமிகு கணவரும், ரொக்ஸன் (கனடா), லியோனி, டலஸ்ரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆன் (கனடா), ஜெயகுமார், மரினா பவானி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், விக்ரோரியா (கனடா), காலஞ்சென்ற மார்கிரட் மற்றும் ஜெயரட்ணம், சவுந்தரி காலஞ்சென்றவர்களான தர்மரட்ணம், செல்வரட்ணம், வேஜினி ஆகியோரின் சகோதரனும், ஜீவராஜா, சுகிர்தராஜா, ஜெயராஜா, காலஞ்சென்ற ரதி மற்றும் ஜெனோ, ஆனந்தராஜா, றொசிற்றா ஆகியோரின் அத்தானும், விக்ரர், அரியமலர், பத்மனாதன், சுகிர்தா, வனஜா, புஸ்பராணி, ஈசா, ஜொய்சி, சிங்கராயர், கமல்ராஜ், ராகினி, லயனல் ஆகியோரின் மைத்துனரும், லுடிஷன் (கனடா), ஷரோன் (கனடா), குளோடியா, ஏட்ரியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (10.06.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.


**உணவு ஓடர் ஏற்றுக்கொள்ளப்படும்**
மதிய உணவு ஓடருக்கு
செய்து தரப்படும்
076 758 5775, 076 9716 225

**ஆண் வேலையாள் தேவை**
மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு ஆண் வேலையாள்கள் தேவை. சம்பளம் 30,000/= இற்கு மேல் எடுக்கலாம்.
தொடர்பு:-077 6722 056

**வேலைஆள்கள் தேவை**
வவுனியா, மன்னார் மாவட்டங்களிற்கு
- கணினி இயக்குநர்,
- களஞ்சியப் பொறுப்பாளர்,
- பொதிசெய்பவர்கள்

பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- 076 169 2517

**தேவை**
தேங்காய், கொப்பறா, நெல், தானிய வகை கொள்வனவு செய்யப்படும்.
மாப்பியன் மில்
இல.104, சுதுமலை, மானிப்பாய்
077 7722 215

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**வேலையாள் தேவை**
கிளிநொச்சியில் உள்ள ரெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.
1. சமையலாளர் (Chef)
   ஸ்சைனிஸ், இந்தியன் உணவுவகைகளில் தேர்ச்சி
2. பராமரிப்பாளர்
   (வயரிங், பிளமிங் அனுபவம் உள்ளவர்கள்)
3. வரவேற்பாளர் (பெண்)

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 938 5521


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
08 . 11 . 1939

மறைவு
22 . 05 . 2019

## அமரர் திருமதி நாகராசா மனோன்மணி

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)


திதி:- வைகாசி அபரபக்க சதுர்த்தி (09.06.2020)

சிறுவயதில் நாம் தந்தையை இழந்து நின்றபோது
பிள்ளைகள் மூவர் எங்கள் வாழ்க்கைக்காக
நீங்கள் உங்கள் வாழ்வை தியாகம் செய்து
தனித்து நின்று போராடி அன்போடு எமை வளர்த்து
கல்வி, பாசம், செல்வம், பண்பு அனைத்தையும் எமக்கு
கிடைக்க வழி அமைத்து நன்நிலைக்கு ஆளாக்கி
சித்தாந்த ரத்தினமாய் இறை நம்பிக்கையுடன் வாழ்ந்து
பேரப்பிள்ளைகளின் உயர் நிலைகளைக் காண
முன் உங்கள் கடமை முடிந்தது என்று
எம்மை விட்டு பிரிந்து அகவை ஒன்று ஆனதுவோ?
தாங்கவே முடியவில்லை உங்கள் பிரிவால் தினமும்
கண்ணீர் சிந்துகின்றோம்.
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

மஞ்சத்தடி, இணுவில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# நன்றி நவிலல்



மண்ணில் 06.05.1975
விண்ணில் 27.05.2020

கடந்த (27.05.2020)
புதன்கிழமை அன்று சிவபதமடைந்த

அமரர்

## பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா வேணுகோபால சர்மா (வேணுஐயா)

அவர்களின் இழப்பினால் நாம் துயருற்றிருந்த வேளை எமக்கு சகலவழிகளிலும் உதவியவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறி ஆற்றுப்படுத்தியவர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையம் சாற்றி அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப்பிரசுரம் வெளியிட்ட ஆலயம் சார்ந்த அன்பர்கள் அனைவருக்கும், பாடசாலை சமூகத்தினருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும், முகநூல் ஊடாகத் துயரைப் பகிர்ந்து கொண்ட அன்பர்களுக்கும் தான நிகழ்வுகளில் கலந்து கொண்ட அந்தண உத்தமர்களுக்கும், உணவு பானாதிகள் வழங்கிய உறவினர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் தசமாஹ, கிருகயக்ஞ, ஆத்மசாந்தி வழிபாடுகள் தற்போதைய காலச் சூழலுக்கு அமைவாக 05.06.2020 முதல் 08.06.2020 வரையில் கிரமமான முறையில் நடைபெற்றது என்பதையும் நன்றியறிதலோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணுவில் கந்தசுவாமி கோவிலடி,
இணுவில் மேற்கு,

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 05 . 1947

மறைவு 01 . 06 . 2020

### திருமதி புவனேஸ்வரி இராமமூர்த்தி

யாழ். கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், குப்பிளான், பிரான்ஸ் La Plaine Saint Denis ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராமமூர்த்தி கடந்த (01.06.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (சின்னத்தம்பி சாஸ்திரியார்) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி புதுநாயகம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இராமமூர்த்தியின் (மூர்த்தி) அன்பு மனைவியும், கமலரோகிணி (சுவிஸ்), கமலராஜினி (ஜேர்மனி), சுபாஜினி (இலங்கை), கஜந்தினி (பிரான்ஸ்), கஜந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகநாதன் (கவி-சுவிஸ்), இராஜரட்ணம் (செல்வம்-ஜேர்மனி), தங்கவடிவேல் (இலங்கை), குணரூபன் (குணேஸ்-பிரான்ஸ்), அபர்னா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இராஜேஸ்வரி (பிரான்ஸ்), தனபாலசிங்கம் (சுவிஸ்), சறோஜினிதேவி (இலங்கை), புஸ்பநாயகி (இலங்கை) காலஞ்சென்றவர்களான ரேணுகானந்ததேவி (இலங்கை) கிருஸ்ணானந்ததேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசம்மா (இலங்கை), காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (இலங்கை), தங்கராசா (இலங்கை) மற்றும் அன்னபூரணம் (இலங்கை), தர்மலிங்கம் (இலங்கை), சுந்தர லிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், லாவண்யா-அரவிந்தம் (சுவிஸ்), காருண்யன் (அருண்-சுவிஸ்), சார்லினி (ஜேர்மனி), சார்மினி (ஜேர்மனி), கானகன் (நிலவன்-இலங்கை), காலஞ்சென்ற வெண்ணிலா (இலங்கை), கஜதுர்க்கா (பிரான்ஸ்), கஜராகவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், அகிசனின் பாசமிகு அப்பம்மாவும், ஆகாசினி (சுவிஸ்), லாகித்யன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.06.2020) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு: கொரோனா காரணமாக இறுதிக்கிரியைகள் குடும்பத்தினரோடு மட்டுமே நடைபெறும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குப்பிழான் தெற்கு.
+94772475223

தகவல் :
குடும்பத்தினர்
தங்கவடிவேல் சுபாஜினி

## எம் குலவிளக்கின் 1ஆம் ஆண்டு நினைவலைகள்



பிரம்மன் மகிழ்வில் . 26 . 09 . 1989

ருத்திரன் அணைப்பில் . 22 . 05 . 2019

கடந்த (22.05.2019) அன்று சிவபதமடைந்த ஜெகதீஸ்வரன் சர்வேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான முருகேசு (நித்தியானந்த பவன் - கீரிமலை), இராசம்மா (கீரிமலை பெண்கள் கேணி பாதுகாவலர்), வைரமுத்து (ஸ்ரீ முருகன் கபே - மாவிட்டபுரம்), சின்னதங்கம் ஆகியோரின் பேரனுமான

### அமரர் ஜெகதீஸ்வரன் உமேஸ்

(MRK கணினி நிறுவன உரிமையாளரும், கணனி வலைபின்னல் வடிவமைப்பாளரும்)

உன் புன்னகை பூத்த கனிவான முகமும்
நன்னயமாய் பேசும் நாணயமான பண்பும்
உன்பால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வசீகரமும்
மூ பத்து ஆண்டுகளில் அடங்குமென எண்ணவில்லையே
ஒற்றையாய் பிறந்த நீ விருச்சமாவாய் என்றிருக்க
காலனின் கணக்கது கதி கலங்க வைத்ததுவே
மணமாலை சூட்டி அழகு பார்க்க இருந்த எமை
பிணமாலை சூட்டி வழியனுப்ப வைத்தானே
வந்த நோக்கம் முடித்து ஆன்மாவும் பிரிந்ததுவே
பொல்லா இவ்வுலகில் போராடி பயனில்லையென
நீயும் அமைதியாய் சொல்லாமல் சென்றாயடா
இறைசிவன் பாதம் நாடி சென்ற நீயும்
அவன் தாளில் பேரின்ப பெருவாழ்வடைவாயாக ...

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திக் கிரியை இன்று (09.06.2020) செவ்வாய்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைத்து உற்றார், உறவினர், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

6/6, ஐயனார் கோவிலடி,
சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
ஜெகதீஸ்வரன் குடும்பத்தினர்
+94776306697, +94762165832

## மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 08 . 1948

மறைவு 08 . 06 . 2020

### மாணிக்கம் தனபாலசிங்கம்

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **மாணிக்கம் தனபாலசிங்கம்** நேற்று **(08.06.2020)** திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.


அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி (தவமணி) அவர்களின் ஆருயிர்க் கணவரும் பாபு, சுகந்தன், சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆரணி, தீபா, விஜயன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பரராஜசிங்கம், துரைராஜசிங்கம், குணசிங்கம், ராஜேஸ்வரி, தங்கராணி மற்றும் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம், இரத்தினசிங்கம், பரமானந்தன், பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சங்கீதன், மதுஷ், தரன், யுவன், இராவணன், பிரித்தீ ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(09.06.2020)** செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் **2.00** மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

பாபு - 0033 6264 07819, சுகந்தன் - 0033 5189 0063 (பிரான்ஸ்)
077 901 4458, 076 175 4981 (இலங்கை)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை சிவபாதமணி

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பழங்கிணற்றுப் பிள்ளையார் கோவில், கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவபாதமணி நேற்று **(08.06.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - பூரணம் தம்பதியினரின் மருமகனும் பாலகௌரி (சுவிஸ்), இளங்கோவன் (பிரான்ஸ்), சோபனா (ஆசிரியை - யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வசந்தகுமார் (சுவிஸ்), வளர்மதி (பிரான்ஸ்), குலத்துங்கன் (பெரும்பாக உத்தியோகத்தர், கமநலசேவை நிலையம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிந்துஜா, கோகுல்ஷியாம், பிரவீன், அபிஷா, வித்தகன், அங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் வடிவாம்பிகை, ஞானப்பூங்கோதை ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் முத்துலட்சுமி, யோகலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரி, தில்லைநாதன் காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற கனகசபை மற்றும் இரத்தினசபாபதி ஆகியோரின் சகலருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(09.06.2020)** செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

பழங்கிணற்றுப் பிள்ளையார் கோவிலடி,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்

## வடக்கிலும்...

ததாவது

எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் நாட ளாவிய ரீதியில் பரீட்சார்த்த தேர்தல் நடத்தப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி இரு மாவட்டங்களையும் இணைத்து ஒரு பரீட்சார்த்த தேர்தலும், மன்னார், முல் லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங் களை இணைத்து முல்லைத்தீவிலும் தேர்தல் நடத்தப்படும்.

இவ்வாறு இரண்டு, மூன்று மாவட்டங் களை இணைத்து அதனை செய்வதற்கு முயற்சிக்கின்றோம். ஏனெனில் நேற்று (நேற்று முன்தினம்) நடத்தப்பட்ட பரீட் சார்த்த தேர்தல் வெற்றியளிக்கவில்லை. பல விடயங்களை கற்றுக்கொள்ளவேண் டியுள்ளது.

கொரோனா வைரஸ் பரவாத வகையில் பாதுகாப்பான முறையில் தேர்தலை நடத்துவதே எமது இலக்காக இருக்கின் றது. அதேபோல் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களுக்கும் தெளிவுபடுத்தவுள்ளோம்என்றார்.(எ-44)

## பாஸ்...

தொடக்கம் மாவட்டங்களுக்கு இடையி லான போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப் பட்டதையடுத்தே பாஸ் பெறும் நடை முறை கைவிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக மாவட் டத்தை விட்டு ஏனைய மாவட்டங்களுக்கு செல்பவர்கள் சுகாதாரத் திணைக்களத் தில் பரிசோதனை மேற்கொண்டு அதன் அறிக்கையை பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து பாஸ் பெற்று பயன்படுத்தி னர். தற்போது மாவட்டங்களுக்கு இடை யில் போக்குவரத்து செய்வதற்கு அனு மதி வழங்கப்பட்டதையடுத்து பாஸ் பெறு வது நிறுத்தப்பட்டுள்ளது. (ம-9)

## இணுவில்...

வீடுகளிலிருந்தவர்கள் சுய தனிமைப்ப டுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இன்று அல்லது நாளை பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வ ரன் தெரிவித்தார்.

இந்தியப் புடைவை வியாபாரி இணு வில் பகுதியில் தங்கியிருந்துள்ளார். அவர் அந்தப் பகுதியிலுள்ள மூன்று வீடுகளுக்கு சென்று வந்துள்ளார். மேலும் ஏழாலைப் பகுதியிலுள்ள ஓர் வீட்டுக்கும் சென்றுள்ளார். அந்த வீட்டில் உள்ளவர்களை சுய தனிமைப்ப டுத்தலுக்கு உட்படுத்தியுள்ளோம். அவர் களுக்கு இன்று அல்லது நாளை பி.சி. ஆர். சோதனை முன்னெடுக்கப்படும், என்றார். (ஒ,5)

## மறைக்கிறதா...

செய்யப்பட்டது. இருப்பினும் இந்த விட யம் இதுவரையில் இந்தியத் தூதரகம் ஊடாக சுகாதார சேவைகள் திணைக்க ளத்திடம் தெரிவிக்கப்படவில்லை. வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர் மூன்றாம் தரப்பு ஊடாக அறிந்தே, தொற்று விடயத்தை உறுதிப்படுத்தித் தரு மாறு இந்தியத் தூதரகத்திடம் கோரியுள் ளனர்.

யாழ்ப்பாணத்தில் மூன்று மாதங்களாக தங்கியிருந்த இந்தியப் புடைவை வியாபாரி கடந்த மே மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பா ணத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட் டார். முதலாம் திகதி கொழும்பை அடைந்த அவர் இரண்டாம் திகதி இந்தி யாவைச் சென்றடைந்தார். அங்கு அவ ருக்கு பி.சி.ஆர்.சோதனை மேற்கொள் ளப்பட்டது. இந்த மாதம் 3ஆம் திகதி அவருக்கு தொற்று இருப்பது உறுதிப்ப டுத்தப்பட்டது.

இந்த விடயம் இந்தியத் தூதரகம் ஊடாக இலங்கைக்கு இதுவரையில் அறிவிக்கப் படவில்லை.

தொற்றுக்குள்ளான இந்தியப் புடைவை வியாபாரி யாழ்ப்பாணம் ஏழாலையை லுள்ள அவரது நண்பர் ஒருவருக்கு விட யத்தை தெரியப்படுத்தியுள்ளார். அதன் ஊடாகவே இந்த விடயம் வடக்கு மாகாண சுகாதாரத் தரப்பினருக்கு தெரியவந்தது. இதனையடுத்து, இந்தியத் தூதரகத்திடம் இந்த விடயத்தை உறுதிப்படுத்தித் தரு மாறு வடக்கு மாகாண சுகாதாரத் திணைக் களத்தினர் கோரியுள்ளனர். (ஒ,5)

## காதலர்களை...

வரணி எல்லையை ஒட்டிய மாசேரி பகுதி யில் வைத்து கடத்த முயன்றுள்ளது. அவர்களிடம் இருந்து பெண் ஒருவர் தப்பித்து வந்து மக்களின் உதவியுடன் கொடிகாமம் பொலிஸில் சரணடைந்துள் ளார்.

சுன்னாகம் பகுதியில் இருந்து பெண்கள் இருவர் கொடிகாமத்தில் உள்ள காதலர் கள் என்று கூறப்படும் இருவரைச் சந் திக்க வந்துள்ளனர் என்றும், இளைஞர் கள் இரு பெண்களையும் கொடிகாமம் பகுதியில் இருந்து மாசேரி பகுதிக்கு அழைத்து சென்றனர் என்றும் தெரிவிக் கப்படுகின்றது.

அங்கு குடத்தனை பகுதியில் இருந்து வந்த இளைஞர்கள் குழுவொன்று பெண் களை கடத்தி செல்ல முற்பட்ட வேளை ஒரு பெண் தப்பி அந்தப் பகுதி மக்களின் உதவியுடன் கொடிகாமம் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார் என்றும் கூறப்படு கின்றது.

சரணடைந்த பெண் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து கொடி காமம் பொலிஸாரும் பருத்தித்துறை, பொலிஸாரும் இணைந்து மற்றைய பெண், இரு இளைஞர்கள் மற்றும் கடத் தல் சந்தேக நபர்கள் ஆகியோரைத் தேடி வருகின்றனர்.

காதலர்கள் என்று கூறப்படும் இளைஞர் கள் இருவரும் குறித்த பெண்கள் இருவ ரையும் திட்டமிட்டு அழைத்து, இவ்வாறு ஏனையோருடன் இணைந்து இந்த கடத் தல் முயற்சியை மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-159,26)

## ஐ.நாவை...

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர் மானங்களின் இணை அனுசரணையி லிருந்து இலங்கை விலகியதால் அந்தத் தீர்மானங்களிலிருந்து முழுமையாக வெளியேறிவிட்டோம் என்றோ அல்லது அந்தத் தீர்மானங்கள் வலுவிழந்துவிட் டன என்றோ அரசு எண்ணக்கூடாது. இலங்கை மீதான ஐ.நா. தீர்மானங்கள் இன்னமும் வலுவுடன்தான் இருக்கின் றன. அதை நடைமுறைப்படுத்த எதிர்வ ரும் மார்ச் மாதம் வரைக்குத்தான் கால அவகாசம் இருக்கின்றது. அதற்குள் தீர் மானங்களின் பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நாவின் தீர்மானங்களைக் குறித்த காலப்பகுதிக்குள் அரசு நடைமுறைப்ப டுத்தாவிடின் பெரிய பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அது முழுநாட்டுக் கும் பேராபத்தாக மாறும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பதவி யேற்ற நாள் தொடக்கம் அவரும் அவர் தலைமையிலான அரச தரப்பினரும் சர்வதேச அமைப்புகளுக்குச் சவால் விடும் வகையில் செயற்பட்டு வருகின்ற னர். இதை அவர்கள் உடன் நிறுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண் டார். (ஒ,5,22)

## ஓகஸ்ட்...

தேர்தல்கள் ஆணைக்குழுவில் இன்று நடைபெற்ற கூட்டத்தில் நீண்ட இழுபறி யின் பின்னர் இந்தத் தீர்மானங்கள் எட் டப்பட்டுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது. முதலா வதாக வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்களை உள்ளடக்கிய வர்த்த மானி வெளியிடும் விடயம் ஆராய எடுத் துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தேர்தல்கள் ஆணைக்கு முத் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தவிர்ந்த உறுப்பினர்கள் இருவரும், மருத்துவத் துறையினருடன் கலந்துரை யாடிய பின்னரே இந்த வர்த்தமானி வெளியிடலாம் என்று கருத்துத் தெரிவித் துள்ளனர். இதனால் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அது தீர்க்கப்படாமலே ஆணைக்குழுவின் காலைக் கூட்டம் முடி வுக்கு வந்தது.

மீளவும் பி.ப. 2 மணிக்கு ஆணைக்கு முக் கூட்டம் ஆரம்பமானது. மருத்துவத் துறையினருடன் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதற்கு அமைவாக, வேட்பா ளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் அடங்கிய வர்த்தமானியில் ஆணைக்கு முத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் கையெழுத்திட்டனர். இந்த வர்த்தமானி இன்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்ப டும்.

அதேவேளை, தேர்தல் திகதியைத் தீர்மா னிக்கும் கலந்துரையாடல் அதனைத் தொடர்ந்து இடம்பெற்றது. ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி மற்றும் மூன்றாம் திகதி விடுமுறை தினம் என்பவற்றைக் கருத் தில் எடுத்து ஓகஸ்ட் 5 ஆம்திகதி அல்லது 8 ஆம் திகதி தேர்தலை நடத்தத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி நாளை புதன்கிழமை வெளியிடப்படும். (ஒ,5,105)

## யாழில்...

கடந்த பெப்ரவரி மாதம் புடவை வியாபா ரத்துக்காக மேற்படி நபருடன் சிலர் யாழ்ப் பாணம் வந்துள்ளனர். இணுவில் தியேட் டர்ஒழுங்கைப் பகுதியிலுள்ள வீடொன்றை வாடகைக்கு எடுத்து தங்கியுள்ளனர். அந்த வீட்டில் 4 பேர் இருந்துள்ளனர். கொரோனா அச்சம் காரணமாக தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதையடுத்து அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் அங்கே தங்கியிருந் துள்ளனர்.

ஏப்ரல் 7ஆம் திகதி அங்கிருந்த நால்வ ரில் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். அவருக்கு மூளையில் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாகவே உயிரிழந்தாக உடற்கூற் றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட் டது.

இலங்கையில் சிக்கியிருந்த இந்தியர் களை அழைத்துச் செல்லும் திட்டத்தை இந்திய அரசு செயற்படுத்தியது. அதற்கு அமைவாக இணுவிலில் தங்கியிருந்த இந்தியர்கள், மே மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பேருந்தில் சென்றுள்ளனர். கொழும்பு புறக்கோட்டையில் குளித்துவிட்டு உடன டியாகவே கொழும்புத் துறைமுகம் ஊடாக இந்தியாவின் தூத்துக்குடிக்கு கப்பலில் சென்றுள்ளனர். அவர்களுடன் 700 இற்கு மேற்பட்ட இந்தியர்கள் நாடு திரும்பினர்.

இணுவிலில் தங்கியிருந்த கணேஸ் பாபு தன்னுடைய சொந்த,மாவட்டமான திண் டுக்கல்லுக்குச் சென்றதும் , அங்குள்ள கல்லூரியில் தனிமைப்படுத்தலில் வைக் கப்பட்டார். அவருக்கு பி.சி.ஆர். சோதனை மூன்றாம் திகதி மேற்கொள்ளப்பட்டது. கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டது. அதனையடுத்து அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் இணுவிலில் தங்கியிருந்த காலப் பகுதியில், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு நீக்கப்பட்ட காலப் பகுதிகளில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வியாபார நடவடிக்கைக்குச் சென்றுள் ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,5)

## மரத்தால்...

வரே உயிரிழந்தவராவார்.

ஆடுகளுக்கு குழை பறிப்பதற்காக மரம் ஒன்றில் ஏறியபோதே அவர் தவறி வீழ்ந் துள்ளார். படுகாயமடைந்த நிலையில் உடனடியாக வவுனியா மருத்துவமனை யில் சிகிச்சைக்காக அவர் சேர்க்கப்பட் டார். எனினும் அங்கு கொண்டு செல்லும் முன்னரே அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் வவுனியா மருத் துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மடுகந்தை பொலி ஸார் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். (ப-110)

## பூநகரியில்...

டைந்தவர் கிளிநொச்சி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஜெயபுரத்தைச் சேர்ந்த இரு பிள்ளைக ளின் தந்தையான செ.தவரஞ்சன் (வயது-41) என்பவரே உயிரிழந்தவரா வார். காயமடைந்தவர் ஜெயபுரத்தைச் சேர்ந்த செ.வசந்தகுமார் (வயது-41) என்ற 4 பிள்ளைகளின் தந்தையாவார்.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மணல் ஏற்றி வந்த டிப்பர் வாக னம் வீதியைக் கடக்க முயன்றபோது, மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளா னது என்று கூறப்படுகின்றது. இந்த விபத்து பிற்பகல் 2 மணியளவில் நடந் துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்தவர் களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பான விசாரணைக ளைக் கிளிநொச்சிப் பொலிஸார் முன் னெடுத் துள்ளனர். (எ-6,159)

## இளைஞன்...

முற்பகல் 10.30 மணியளவில் நடந்துள் ளது. அவர் திடீரென மயங்கி விழுந்ததும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்குக் கொண்டுவரப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந் துள்ளார்.

யாழ்ப்பாணம், அச்சுக வீதியைச் சேர்ந்த பி.றெஜினோல்ட் (வயது-40) என்பவரே உயிரிழந்துள்ளார். இவரது சடலம் யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இவர் ஒரு வயதுப் பிள்ளையின் தந்தையாவார்.

ஒப்பந்த அடிப்படையில் ரயில் பாதை சீரமைப்புப் பணியில் தொழில்நுட்ப உத வியாளராகப் பணியாற்றியுள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (க-26,159,20)

# கொரோனா தொடர்பில் சீனா விரிவு அறிக்கை!

- எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
- வைரஸின் தாக்கங்களை உணர்ந்தது எப்போது?
- மனிதனில் இருந்து மனிதனுக்குப் பரவிய விதம்!



**வுகான், ஜூன் 9**

**கொரோனா வைரஸை சீனா திட்டமிட்டுத்தான் உலக நாடுகளுக்குப் பரப்பியது என்று உலக நாடுகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவரும் நிலையில், கொரோனா நோயாளி எப்போது முதன்முதலாகக் கண்டறியப்பட்டார்?, அதன் பின்னர் மனிதர்களுக்கு எவ்வாறு பரவியது?, வைரஸின் தாக்கங்களைச் சீனா எப்போது உணர்ந்தது? என்பது குறித்த தகவல்களை வெள்ளை அறிக்கைமூலம் வெளிப்படுத்தியுள்ளது சீனா.**

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முதல் நோயாளி கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பர் 27ஆம் திகதி வுகான் மருத்துவமனை ஒன்றில் கண்டறியப்பட்டார். அதன்பின் அந்த மருத்துவமனையின் மருத்துவர்கள் மருத்துவ வல்லுநர்களுக்குத் தகவல் தெரிவித்து அந்த நோயாளியின் உடல்நிலை மற்றும் தாக்கம் குறித்து ஆய்வுசெய்து தொற்று குறித்த ஆய்வை மேற்கொள்ளுமாறும், ஆய்வுகூட சோதனையை தொடங்குமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

ஆனால், முதல்கட்டமாக அந்த நோயாளிக்கு ஏற்பட்ட தொற்றைப் பார்த்து நிமோனியா வைரஸ் என்றுதான் கணித்தார்கள். அதன்பின் தேசிய சுகாதார ஆணையம் மூலம் மருத்துவ வல்லுநர்கள் அந்த நோயாளியையும், வைரஸையும் ஆய்வு செய்து இது மனிதர்களுக்கு இடையே மனிதர்கள் மூலம் பரவக்கூடிய வைரஸ் என்று 2020ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் திகதி அறிவித்தார்கள்.

உலக மருத்துவ வல்லுநர்கள் கொரோனா குறித்து அறிவிக்கும் ஒரு மாதத்துக்கு முன்புதான் சீன மருத்துவ வல்லுநர்கள் கொரோனா குறித்து அறிந்தார்கள். ஜனவரி 19ஆம் திகதிக்கு முன்பாக, இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவுமா? என்பது குறித்த போதுமான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. மருத்துவ வல்லுநர்கள் குழு வுகான் நகரத்துக்கு ஜனவரி மாதம் சென்றபோது ஏராளமானோர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார்கள், ஆனால், எவ்வாறு பரவியது, ஹூனன் சந்தையிலிருந்து காய்ச்சல் பரவியதா? என்பது குறித்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

அதுமட்டுமல்லாமல் வெளவால்கள், எறும்பு தின்னிகள் மூலம் மனிதர்களுக்கு பரவியதாக நம்பப்பட்டாலும் அதற்கான ஆதாரம் இல்லை. ஆய்வுகள் மூலமே இதை அறிய முடியும், மனிதர்கள் மூலம் மனிதர்களுக்குப் பரவக்கூடிய தன்மையுள்ளதா? எனக் கண்டறிய முடியும் என நம்பினோம். இதையடுத்து, இறுதியற்ற சூழல் நிலவியதால், கொரோனா வைரஸை எதிர்த்துப் போராட வுகான் நகரம், ஹூபே மாநிலமே ஜனவரி 14ஆம் திகதி தயாராகியது. குவாங்டாங் நகரில் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஜனவரி 20ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதுதான் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் என்பதை உறுதி செய்தோம். மனிதர்கள் மூலம் மனிதர்களுக்குக் கொரோனா பரவும் என்பதை கடந்த ஜனவரி 19ஆம் திகதிதான் கண்டறிந்து உறுதி செய்தோம். உடனடியாக ஹூபே மாநிலம் முழுவதும் தொற்று நோய் குறித்த விசாரணை, சிகிச்சையைத் தொடங்கி விரைவுபடுத்தினோம். அதன்பின் சிறிதுகூட தாமதிக்காமல் உலக சுகாதார அமைப்பு, அமெரிக்கா உள்ளிட்ட மற்ற நாடுகளுக்கும் கொரோனா வைரஸ் குறித்த அறிவிப்பை தெரிவித்து, அது பெருந்தொற்றாக மாறலாம் என எச்சரித்தோம். வுகான் மாநிலத்தில் சமூகப்பரவல் நடந்து, அது பல்வேறு நகரங்களுக்கும் பரவியது. அதன்பின் தேசிய அளவில் வைரஸைக் கட்டுப்படுத்தும் திட்டம் செயற்படுத்தப்பட்டு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது - என்றுள்ளது. (ம)

## நியூசிலாந்தில் கொரோனா 0

வெலிங்டன், ஜூன் 9

கொரோனா நோயாளர்கள் இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது நியூசிலாந்து. கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த இறுதி நபர் நேற்றுமுன்தினம் நலமடைந்து திரும்பியமையை அடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நியூசிலாந்துப் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

நியூசிலாந்தில் கடந்த 17 நாள்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்றுவந்த கடைசி கொரோனா நோயாளி குணமடைந்துவிட்டார். கடந்த 17 நாள்களாக 40 ஆயிரம் பேருக்குக் கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டதில் ஒருவர்கூட பாதிக்கப்படவில்லை. ஆதலால் நாட்டின் பொருளாதார நடவடிக்கைக்காக அடுத்த கட்ட தளர்வுகளை அமைச்சரவை கூடி ஆலோசித்து அறிவிக்கும். நியூசிலாந்திலிருந்து கொரோனா வைரஸை ஒழித்துவிட்டோம் என நம்புகிறோம் - என்றுள்ளது. (ம)

## அல்குவைதா தலைவர் மாலியில் படுகொலை!

பரிஸ், ஜூன் 9

மாலி நாட்டில் நடத்தப்பட்ட அதிரடி தாக்குதலில் அல் குவைதாவுக்கான வட ஆபிரிக்கத் தலைவர் அப்தெல் மாலிக் டுரூக்டெல் கொல்லப்பட்டார் என்று பிரான்ஸ் அறிவித்துள்ளது.

அல்குவைதாவின் பயங்கரவாத இயக்கத்துக்கு வட ஆபிரிக்காவில் தலைவராக திகழ்ந்து வந்தவர் அப்தெல்மாலிக் டுரூக்டெல் (வயது-50). வடஆபிரிக்காவில் உள்ள அல்குவைதாவின் துணை அமைப்புகளும் அவரது பொறுப்பில்தான் செயற்பட்டு வந்தன. இந்த நிலையில், மாலியில் பயங்கரவாதிகளுக்கு எதிரான பிரான்ஸ் படைகள் நடத்திய அதிரடி தாக்குதலில் நேற்றுமுன்தினம் அவர் கொல்லப்பட்டார். (ம)

**மணமக்கள் தேவை**

- இந்துகௌரவ குடும்பத்தை சேர்ந்த 28 வயதுடைய UK இஞ்சினியர் மணமகளுக்கு மணமகன் தேவை.
- 34 வயதுடைய Australia Accountant மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு:-
0041 7644 13803, 076 212 3124

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

வெளி நாடுகளுக்கான பொதிகள் கடிதங்கள் சேவை DHL மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
**திருமுருகன் கொம் நெற் (Pvt)Ltd**
321, K.K.S. Road, Jaffna
கிளைகள்:நெல்லியடி, திருநெல்வேலி, கொழும்பு. 0777 554 528

## அடிமை வியாபாரியினது சிலையை ஆற்றில் வீசிய போராட்டக்காரர்கள்

*பிரிட்டனில் சம்பவம்*

லண்டன், ஜூன் 9

இன, நிறவெறிக்கு எதிராக அமெரிக்காவில் ஆரம்பித்த போராட்டங்கள் தற்போது அமெரிக்காவுக்கு வெளியிலும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. பிரிட்டனில் இடம்பெற்ற போராட்டம் ஒன்றில், அடிமை வியாபாரியின் சிலையைப் புரட்டிய போராட்டக்காரர்கள் அதை ஆற்றில் வீசினர். பிரிட்டனின் பிரிஸ்டால் நகரில் இனவெறிக்கு எதிராக நேற்று ஏராளமானோர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அத்துடன், கறுப்பின மக்களை அடிமைப்படுத்தி வியாபாரம் செய்த எட்வர்ட் கோல்ஸ்டனின் சிலையை போராட்டக்காரர்கள் அடித்து நொறுக்கி துறைமுகத்தில் உள்ள ஆற்றில் வீசினர்.

18 அடி உயர வெண்கலச் சிலையை கயிறுகட்டி கீழேதள்ளி, துறைமுகத்துக்கு உருட்டிச் சென்று ஆற்றில் தள்ளும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றன. (ம)

## ஜோர்ஜ் புளொய்ட் படுகொலை: 10 நாள்களைக் கடந்தும் போர்

வொஷிங்டன், ஜூன் 9

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் பொலிஸாரால் கொல்லப்பட்டதை அடுத்து, அங்கு ஆரம்பிக்கப்பட்ட நிறவெறிக்கு எதிரான போராட்டம் 10 நாள்களைக் கடந்தும் நீண்டு செல்கின்றது.




அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவரின் கழுத்தில் பொலிஸ் அதிகாரியொருவர் 9 நிமிடங்களுக்கும் மேலாகத் தனது முழங்காலை அழுத்திப் பிடித்திருந்தார். இதையடுத்து அந்தக் கறுப்பினத்தவர் இறந்தார். புளொய்ட்டின் இறப்பு அமெரிக்காவில் பெரும் கலவரத்துக்கு வித்திட்டுள்ளது. சுமார் 10 நாள்களுக்கு மேலாக இந்தக் கலவரங்கள் தொடர்ந்து வருகின்றன.

கலிபோர்னியா, பென்சில்வேனியா, நியூயோர்க், வொஷிங்டன், லொஸ்ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட பெரு நகர்களிலும் நிறவெறிக்கு எதிரான போராட்டம் தற்போது வலுப்பெற்றுள்ளது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.